பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை 22.11.2020 கதிர் 17

இனி அது இரகசியம் அல்ல!

இந்த ஆண்டு முடியும் வரை – அடுத்த ஆறு வாரங்களும் – அரசியல் வானிலும் எல்லாம் 'டல்' ஆகத்தான், அதிக நகர்வு, முன்னேற்றம் ஏதுமின்றி இருக்கும் என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

அமைச்சரவை பக்கம் 02

# கொரோனாவுடன் கொழும்பிலிருந்து மரண வீட்டுக்கு வந்த குடும்பப் பெண்

## கிளிநொச்சியில் நேற்று இருவருக்குத் தொற்று

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பரிசோதனைக் கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் கிளிநொச்சியில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் கிளிநொச்சியில் நடைபெற்ற மரணச் சடங்குக்காகக் கொழும்பிலிருந்து வந்த பெண்ணாவார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, திருவையாறு பகுதியில் நடைபெற்ற மரணச் சடங்கு ஒன்றுக்கு கொழும்பு, ஆட்டுப்பட்டித்தெரு பகுதியிலிருந்து பெண்ணொருவர் வந்துள்ளார் என்று பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களின் கவனத்துக்குக் கொண்டு பக்கம் 02

# இலங்கையில் 9 பேரை ஒரே நாளில் பலியெடுத்தது கொரோனா வைரஸ்

## சாவு எண்ணிக்கை 83 ஆக அதிகரிப்பு;

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மட்டும் 9 பேர் சாவடைந்துள்ளனர்.

நாட்டில் கொரோனாவால் ஒரே நாளில் அதிகப் பேர் உயிரிழந்த நாளாக நேற்றைய நாள் (நவம்பர் 21ஆம் திகதி) பதிவாகியுள்ளது.

அதற்கமைய இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 83 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று உயிரிழந்த 9 பேரும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார். பக்கம் 02



## 19 கடற்படையினருக்குக் கொரோனா

கடற்படையினர் 19 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் பக்கம் 02

## வடக்கில் நேற்று 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 266 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 10 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்திலிருக்கும் விமானப் படையைச் சேர்ந்த 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, கிளிநொச்சியில் இருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூபா 1000 நிச்சயம் கிடைக்கும்

### சபையில் அமைச்சர் தினேஷ் உறுதி

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2020 ஜனவரி மாதம் முதல் நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

வரவு – செலவுத்திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


இது தொடர்பில் பக்கம் 02

## மண்டைதீவில் நீரில் மூழ்கி 2 சிறுவர்கள் பரிதாபச் சாவு

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

மண்டைதீவில் நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சோகச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. பக்கம் 02



## தீவகத்திலும் மக்கள் ஒன்றுகூட நினைவேந்த தடை விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்றம்!

யாழ்ப்பாணம் தீவகத்தில் நேற்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒன்றுகூடி நிகழ்வுகளை நடத்த ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்துக்கு அமைய, கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு இணங்க இந்தத் தடை உத்தரவு நீதிமன்றினால் வழங்கப்பட்டது.

வேலணை பிரதேச சபை உறுப்பினர் நாவலன் கருணாகரன் பக்கம் 02




## சிங்களக் கோரமுகங்களாலேயே தமிழரின் பாரம்பரியம் சிதைப்பு!

### சபையில் சிறிதரன் எம்.பி. சாட்டையடி

சிங்கள இனவாதத்தின் கோர முகங்களால் தமிழ் மக்கள் சிதைக்கப்பட்டு, இன்றளவில் தமது பாரம்பரிய பழக்க வழக்கங்களை இழந்து நிற்கின்றனர்.


– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

எனினும், அவர்கள் சுயத்தோடும் தங்களுக்கே உரிய இறைமையோடும் வாழ்கின்ற ஒரு தமிழ்த் தேசிய இனம் பக்கம் 02

## கொரோனா 19,771 நேற்று 491 பேருக்கு

இலங்கையில் நேற்றும் 491 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுடன் பக்கம் 02

## 22 கிலோ கஞ்சாவுடன் பருத்தித்துறையில் ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரின் அதிரடி பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மாற்றம் புத்தாண்டு பிறந்தமையுடன் நடக்கும் என்கின்றார்கள்.

உத்தேச அமைச்சரவை மாற்றத்தின் போது ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சைத் தம்வசம் வைத்திருப்பார் என்று தெரிகின்றது.

ஜனவரியில் அமைச்சரவை மாற்றியமைக்கப்படும் போது அந்த அமைச்சரவையில் பஸில் ராஜபக்ஷவும் இடம்பெறுவார் என்று ஆங்கில அரசியல் பத்தி எழுத்தாளர் ஒருவர் மிக உறுதியாக - அடித்துக் கூறுகின்றார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக சமல் ராஜபக்ஷ தொடரும் அதே சமயத்தில் சட்டம், ஒழுங்கு அமைச்சு முன்னாள் கடற்படை அதிகாரியான சரத் வீரசேகரவுக்கு வழங்கப்படும் எனத் தெரிகின்றது.

இவர் தற்போது உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக உள்ளார். புதிய பதவியில் அவர் அமைச்சரவை அந்தஸ்தைப் பெறுவார். அவரின் கீழ் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை என்பன நேரடியாக வரும் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் மொட்டு அணியில் ஆகக் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர் இவர். இலங்கையில் விருப்பு வாக்குகளில் குருநாகல் மாவட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ பெற்ற தொகைக்கு அடுத்து அதி கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர் இவர்தான்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாகக் கடந்த சில வருடங்களாகச் செயற்பட்டு வரும் 'வியத்மக' அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணையத்துக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர் பட்டியல் வந்துள்ளது.

அரசின் புலனாய்வு அமைப்புகளில் ஒன்றான தேசிய புலனாய்வுச் சேவையின் பணிப்பாளராக இருந்த நிமால் வாகிஸ்டரும் ஒரு தேர்தல் ஆணையாளரா கின்றார்.

கோட்டாவின் நிர்வாகத்தில் முன்னாள் படையதிகாரிகளே தேர்தல்கள் ஆணையாளர்களாக வந்து தேர்தல்களை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சில தடவைகள் நான் கோடி காட்டியிருந்தேன். அதுவும் நடக்கலாம் போலதான் தோன்றுகின்றது.

தேர்தல்கள் என்றதும் இன்னொரு தகவலும் நினைவுக்கு வருகின்றது.

நீண்டகாலம் நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை நடத்துவதற்கு வழிசெய்யும் சட்ட மூலத்தைத் தயாரிக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அதுவும் வரும் பிறந்ததும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

அப்படி என்றால் தை பிறந்ததும் மாகாண சபை தேர்தல் திருவிழாவும் சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கலாம் அல்லவா?

–மின்னல் –

## 22 கிலோ கஞ்சா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
சுற்றிவளைப்பின் போது பருத்தித்துறையில் 22 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

பருத்தித்துறை தும்பளை பகுதியில் கஞ்சா கடத்தப்படுவதாக தேசிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அப்பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்

இதன்போது 22 கிலோ கஞ்சா மீட்கப்பட்டதுடன் சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பருத்தித்துறை பொலிஸாரிடம் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் ஒப்படைத்துள்ளனர்

# நவம்பர் 27இல் வீட்டு வாசல்களில் மாவீரர் நினைவுச் சுடர் ஏற்றுவோம்

## கோட்டா அரசின் அடக்குமுறையை தகர்க்க தமிழ்த் தேசியக் கட்சிகள் சேர்ந்து அழைப்பு

**தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் – மாவீரர் துயிலும் இல்லங்கள் சார்ந்த நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சீ.வீ.கே. சிவஞானம், ஈஸ்வரபாதம் சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ சார்பாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு சார்பாக மாணிக்கவாசகர் இளம்பிறையன், கருணாகரன் குணாளன், தனுபன், வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் சார்பாக வேந்தன் (ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர்) உட்படப் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர் .

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டம் ஆகியவற்றைக் காரணம் காட்டி நீதிமன்றங்களின் ஊடாக மாவீரர் நினைவேந்தல் தடையை அரசு ஏற்படுத்தி வரும் நிலையில் எவ்வாறான அணுகுமுறையை கடைப்பிடிப்பது என இதன்போது ஆராயப்பட்டது.

நவம்பர் 27ஆம் திகதி அனைத்து இல்லங்களின் வாசல்களிலும் தீப ஒளியை ஏற்றுமாறு தாயக மக்களிடம் வேண்டுகோள் விடுப்பது என்றும், மக்களின் அச்சத்தைப் போக்கும் விதமாக ஊடகங்கள் மூலமாகத் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளலாம் எனவும் இதன்போது கருத்து கூறப்பட்டது.

அதன்பிரகாரம் எதிர்வரும் 24ஆம் திகதியன்று அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றுகூடி, தாயக மக்களைத் தெளிவுபடுத்துவது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் எதிர்வரும் 27ஆம் திகதி தமிழ் மக்கள் அனைவரும் வீடுகளில் இருந்து, வாசல்களில் தீபமேற்றுமாறு அழைப்பு விடுக்கப்படும்.- எனக் கூறப்பட்டது.

## 19 கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நேற்று தெரிவித்தார்.

இதேவேளை, ரிதீகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கடுபிலகொல்ல கிராமத்தில் இதுவரை 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த கிராமத்தில் நேற்று 6 வயது குழந்தை உள்ளிட்ட மூவருக்குக் கொரோனா தொற்று உறுப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களை சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

## இலங்கையில் 9 பேரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இந்தத்தகவலை அரசதகவல் திணைக்களம் நேற்றிரவு 11.45 மணியளவில் வெளியிட்டுள்ளது.

கொழும்பு 02 ஐச் சேர்ந்த 52 வயது ஆண், வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 65 வயது ஆண் மற்றும் 75 வயது பெண், தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த 89 வயது ஆண், கொழும்பு 10 ஐச் சேர்ந்த 48 வயது பெண் மற்றும் 72 வயது ஆண், கொழும்பு 13 ஐச் சேர்ந்த 69 வயது பெண், வெள்ளவத்தையைச் சேர்ந்த 76 வயது ஆண், பிரதேசம் குறிப்பிடப்படாத 76 வயது பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 3 பேர் வீடுகளிலேயே உயிரிழந்துள்ளனர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

கொரோனாச் சாவு எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வருகின்ற நிலையில் நாட்டு மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

## மண்டைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மண்டைதீவைச் சேர்ந்த சாவிதன் (வயது 7), சார்வின் (வயது 5) ஆகிய இருவருமே மழை நீர் சேகரிக்கும் குன்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்தனர் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

சடலங்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கொரோனா 19, 771...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரை 16 ஆயிரத்து 256 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதேவேளை, நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்து 771 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 13 ஆயிரத்து 590 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 98 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 83 பேர் உயிரிழந்துள்ளனர். (22)

## தோட்டத் தொழிலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவர் மேலும் கூறியதாவது:-

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை விமர்சிக்காது, பெற்றுக்கொடுப்பதற்கு எதிரணி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஆயிரம் ரூபா தொடர்பில் அமரர் ஆறுமுகன் தொண்டமான் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியிருந்தார். நிச்சயம் அதனைப் பெற்றுக்கொடுப்போம் – என்றார்.

## தீவகத்திலும் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..),
அவரது சகோதரர் குணாளன் கருணாகரன், முத்தையாபிள்ளை தம்பிராசா, ரமேஷ், கனகையா மற்றும் மதுஷ் ஆகிய 6 பேரைக் குறிப்பிட்டு இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுத் தொல்லையைத் தடுப்பதற்கும் கொரோனாத் தொற்று நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் தனிமைப்படுத்தல் பிரிவின் கீழும் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் நேற்று நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

வேலணை மற்றும் புங்குடுதீவில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் உள்ளன என்று தகவல் கிடைத்துள்ளன என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அத்துடன், பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலையாகவில்லை.

அதனால் பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் கொரோனா நோய்த் தொற்று கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒன்று கூடி நிகழ்வுகளை நடத்தத் தடை உத்தரவு வழங்கியுள்ளது.

## கொரோனாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
செல்லப்பட்டுள்ளது.

சம்பவத்தை அடுத்து குறித்த பெண்ணை உடனடியாகவே சுகாதார உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து மரண வீட்டுக்கு வந்தவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் களமிறங்கியுள்ளனர்.

இறந்தவரின் இறுதிக்கிரியை எந்தவித சடங்குகளும் இன்றி இன்று நடைபெறவுள்ளது எனப் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, கண்டாவளையில் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கும் நேற்றைய பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## சிங்களக் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
என்பதை அவர்களுடைய பாரம்பரிய வழமைகளும் உணவுப் பழக்க வழக்கங்களும் கலாசாரமுமே உறுதிசெய்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்கள் பிட்டும் வடையும் உண்ட நிலையிலிருந்து பீட்சா உண்ணும் நிலைக்குக் கொண்டு வந்ததாக யாழ். தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சிறிதரன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் தங்களுக்குரிய நிலங்களில் தமக்கான சுயநிர்ணய உரிமையோடு வாழ்ந்த மக்களாவர்.

அவர்கள் தமக்கே உரிய பாரம்பரியம் மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களோடு இந்த மண்ணின் பூர்வீகக் குடிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

எனினும், சிங்கள இனவாதத்தின் கோரமுகங்களால் சிதைக்கப்பட்டு, இன்றளவில் தமது உணவுப் பழக்க வழக்கங்களையே இழந்து, தமது வாழ்க்கையைத் தொலைத்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையிலும் தமது பாரம்பரியங்களை இழக்கக்கூடாது என்பதற்காகவே அம்மாச்சி போன்ற உணவகங்கள் மூலம் தமது பாரம்பரிய உணவுப் பழக்கங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

பொலிஸ் அதிகாரியொருவர் எமது மக்களைப் பிட்டும் வடையும் உண்டு கொண்டிருந்த நிலையிலிருந்து பீட்சா உண்ணும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றோம் என்று கூறியிருக்கின்றார்.

ஆனால், உண்மையில் அவர்கள் எமது மக்களைச் சிதைத்து, படுகொலை செய்து, சின்னாபின்னப்படுத்தியிருக்கின்றார்களே தவிர வேறெந்த நல்ல விடயங்களையும் செய்யவில்லை.

எனவே, அவர்கள் சுயத்தோடும் இறைமையோடும் தங்களுக்கே உரிய இறைமையோடும் வாழ்கின்ற ஒரு தமிழ்த் தேசிய இனம் என்பதை அவர்களுடைய பாரம்பரிய வழமைகளும் உணவுப் பழக்க வழக்கங்களும் கலாசாரமுமே நிலைநாட்டியிருக்கின்றன என்பதை அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும் – என்றார்.

# அரசுக்கு மக்கள் அளித்த ஆணையைக் கொண்டு ஜெனிவாத் தீர்மானத்திலிருந்து வெளியேற முடியும்!

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வாசுதேவ சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 22

எமக்குள்ள மக்கள் ஆணையினைக் கொண்டு அமெரிக்கா கொண்டுவந்த ஜெனிவா தீர்மானத்தில் இருந்து வெளியேறவும், இந்த நாட்டில் நல்லிணக்கத்தையும், மனித உரிமைகளையும், நியாயத்தை கடைப்பிடிக்கவும் நடவடிக்கை எடுப்போம் என்பதையும் அரசாங்கமாக ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம் என நீர் வளங்கள் அமைச்சர் வாசுதேவ நாணயகார சபையில் தெரிவித்தார்.

இன்றுள்ள நெருக்கடியான பொருளாதார நிலைமையில் 2 ஆயிரம் கோடி ரூபாவிற்கு அதிகமான இறக்குமதிகளை செய்ய முடியாது எனவும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குக் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஐரோப்பிய ஒன்றியம் எமக்கு அச்சுறுதல் விடுத்துள்ள தாகக் கூறப்படுகின்றது, எமது இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டாம் என அவர்கள் கூறுகின்றனர், அவர்களா எமக்கான வெளிநாட்டு கையிருப்பைத் தருகின்றனர்? இதே விடயத்தை சர்வதேச நாணய நிதியம் எப்போதுமே கூறிக்கொண்டிருந்தது.

நாட்டில் இறக்குமதியை அளவுக்கதிகமாக இடமளித்து எமக்கு தேவையானவற்றை இறக்குமதி செய்யக்கூறியும் அதற்காக தேவையான கடன்களைத் தாம் தருவதாக கூறினர்.

இதுதான் கடந்த ஆட்சியில் இடம்பெற்றது, இதனால் தான் ரூபாவின் பெறுமதி மோசமான விதத்தில் வீழ்ச்சி கண்டது. இதனால் வட்டி வீதம் அதிகரித்தது. இதனையெல்லாம் குறைக்க வேண்டும் என்றும் ரூபாவின் பெறுமதியை அதிகரிக்க வேண்டும் என்ற காரணத்தால் தான் நாம் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கேள்விகளுக்கு எமது மக்கள் கடந்த தேர்தலில் பதில் கூறியுள்ளனர், மக்கள் ஆணையுடன் நாம் இதற்கான பதிலைக் கூறியுள்ளோம்.

இதே மக்கள் ஆணையுடன் தான் அமெரிக்கா கொண்டுவந்த ஜெனிவா தீர்மானத்தில் இருந்து வெளியேறினோம். எமக்கு கிடைத்த மக்கள் ஆணையைக் கொண்டே நாம் அவ்வாறான தீர்மானம் எடுத்தோம். ஆகவே எமக்குள்ள ஆணையின் பிரகாரம் இந்தத் தீர்மானத்தில் இருந்து வெளியேறவும், இந்த நாட்டின் நல்லிணக்கத்தையும், மனித உரிமைகளையும், இந்த நாட்டின் நியாயத்தை கடைப்பிடிக்கவும் நடவடிக்கை எடுப்போம் என்பதை ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

நாம் ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக உறவை வைத்துக்கொள்வோம், ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக உறவு வேண்டும் என்ற கோரிக்கையை நாம் நிராகரிக்கவில்லை, ஆனால் இன்றுள்ள நெருக்கடியான நிலைமையில் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு அதிகமான இறக்குமதிகளை செய்ய முடியாது என நாம் கூறுவதில் என்ன தவறுள்ளது? உலக வர்த்தக உடன்படிக்கையில் ஒரு நாடு முன்னெடுக்க வேண்டிய தீர்மானங்கள் என்ன வென்பது கூறப்பட்டுள்ளது, அதற்கமைய நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் என அவர் இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 18 மூடை மஞ்சள் வசமாக சிக்கியது



(ந.லோகதயாளன்)

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 18 மூடை மஞ்சள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், வங்காலைப் பகுதியில் வைத்து குறித்த மஞ்சளை இடமாற்றம் செய்ய முயன்ற வேளையே இருநபர்களையும் கடற்படையினர் கைது செய்ததுடன் மஞ்சளையும் கைப்பற்றினர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சள் யாழ்ப்பாணம் ஆயப் பகுதியினரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

## புலம்பெயர் தேசத்திலிருந்து 411 பேர் நாடு வந்தடைந்தனர்!

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 411 இலங்கையர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று (சனிக்கிழமை) காலை வந்தடைந்துள்ளனர்.

கட்டார் - தோஹாவிலிருந்து 332 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 21 பேரும் இந்தியாவிலிருந்து 58 பேரும் இவ்வாறு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மக்களை கினிப் பன்றிகளாக அரசு பயன்படுத்தாது – நாமல்



கொரோனா வைரஸுக்கு எதிராக உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளித்த தடுப்பூசியை இறக்குமதி செய்ய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றில் கருத்து தெரிவித்த அவர், அரசு ஒருபோதும் உலக சுகாதார அமைப்பால் ஒப்புதல் வழங்கப்படாத தடுப்பூசிக்கு மக்களை கினிப் பன்றிகளாகப் பயன்படுத்தாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய கொரோனா வைரஸைக் குணப்படுத்துவதில் 95 வீதம் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ள ஒரு தடுப்பூசியை இறக்குமதி செய்ய அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உட்படபலர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

உலகம் முழுவதும் இந்த கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த போராடிக்கொண்டிருக்கும் நிலையில் மருத்துவ அதிகாரிகள், அரசு ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து நோயைக் கட்டுப்படுத்த முடிந்தது என்றும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசு எடுத்த முடிவுகளின்படி, தொற்றுநோயின் இரண்டாவது அலைகளையும் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தி வருவதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

## கொரோனாத் தொற்றை விட விபத்து உயிரிழப்பு அதிகம்!

### ஒப்பிட்டு நோக்குகிறார் சமல்



தினமும் வீதி விபத்துக்களால் குறைந்தது எட்டு முதல் ஒன்பது பேர் வரை உயிழக்கின்றனர் என உள்நாட்டு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், முறையே 2018 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 151 இறப்புகளும் 2019 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 889 மரணங்களும் பதிவாகியுள்ளன எனவும் கூறினார்.

அதிவேகமாக, குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், வீதியில் சமிக்ஞைகளை பின்பற்றாமை போன்றவை விபத்துக்களில் இறப்பதற்கு முக்கிய காரணங்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்றால் ஏற்படும் உயிரிழப்புக்கள் மற்றும் போரால் ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட விபத்துக்களால் தற்போது ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலை மாணவருக்கு நாளை முதல் பஸ் சேவை!

ஆபத்தான வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகள் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இருப்பினும் இதில் பாரிய சிக்கல்கள் காணப்படுவதாக அகில இலங்கை மாவட்டப் பாடசாலை போக்குவரத்துச் சேவை சங்கத்தின் தலைவர் என்.எல்.கே. ஹரிச்சந்திர பத்மசிறி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பரிந்துரையின் அடிப்படையில் போக்குவரத்து சேவைகளை ஆரம்பிக்கத் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்குத் தேவையான சுகாதார நடைமுறைகளை வழங்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவை கிடைக்கப்பெற்ற பின்னர் சேவையை வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மீண்டும் நீண்ட தூர பஸ் சேவைகள்

கொழும்பு, நவ. 22

வார இறுதியான நேற்று சனிக்கிழமையும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் வழக்கம் போல் நீண்ட தூர பஸ் சேவைகள் இடம்பெற எதிர்பார்த்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் நீண்ட தூர பஸ் சேவைகளை மேற்கொள்ள எதிர் பார்த்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்து பயணிகளை பஸ்களில் ஏற்றவோ அல்லது இறங்கவோ அனுமதிக்கப்படமாட்டாது.

ஏனைய பிரதேசங்களில் வழமை போல் பஸ் சேவைகளை முன்னெடுக்குமாறு டிப்போ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பயணிகளின் வேண்டுகோள் மற்றும் பயன்பாட்டிற்காகக் குறித்த இரண்டு நாட்களுக்கு நீண்ட தூர பஸ் சேவைகள் மேற்கொள்ளப்படும் என்று இலங்கா தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீளாய்வுக்கு முயல்வோம்!

நீதித்துறைனால் தவிர்க்க முடியத சில அசௌகரிங்கள் அவ்வப் போது ஏற்படுவதுண்டு.

அப்படி ஒரு நிலைமையைத் தமிழர்கள் தங்களின் உணர்வுபூர்வ மான ஒரு விவகாரத்தில் இப்போது சந்தித்துக் கொண்டிருக்கின் றார்கள்.

யுத்தத்தின் போது கொல்லப்பட்ட – போரிட்டு மடிந்த – தமது இரத்த உறவுகளை தமிழ் மக்கள் நினைவேந்தல் செய்யும் காலம் இது.

அத்தகைய நினைவேந்தலை 'பயங்கரவாதம்' என்றும், விடுத லைப் புலிகளின் மீளெழுச்சிக்கான நடவடிக்கை என்றும் பூடகமா கக் கற்பிதம் பண்ணி, அதைக் காரணமாக முன்னிறுத்தி, அந்த நினைவேந்தல்களைத் தடுக்கும் அடாவடித்தனத்தை பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு திமிர்த்தனத்தோடு முன்னெடுத்து வரு கின்றது.

இது விடயத்தில், நீதிமன்றங்களை ஒரு தலைப்பட்சமாக பிழை யாக வழி நடத்தி, அந்த நினைவேந்தல்களுக்கு எதிரான தடை உத்தரவுகளைத் தனது கருவியான பொலிஸ் மூலம் பெற்று, முன் னெடுத்து வருகின்றது பேரினவாத அரசு.

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற கோட்பாடு மூலம் தமிழர்களின் தனித்துவத்தை – தேசியத்தை – பேரினத்துக்குள் கபளீகரம் செய்து, சிதைத்தழிப்பதே ராஜபக்ஷக்கள் அரசின் கடபத் திட்டம்.

ஆனால், அந்த 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற கோட்பாட்டைக் கொண்ட நாட்டில், ஒரே விடயத்துக்கு சட்டமும் நீதித்துறையும், வியாக்கியானங்களும் ஒரே மாதிரியாக இல்லை. அவை கூட மன் றுக்கு மன்று வெவ்வேறாக – வித்தியாசமானவையாக – இருக்கின் றன. அதுதான் இப்போது தமிழர்கள் சட்ட ரீதியாக எதிர்கொள்ளும் அசௌகரியம் என்று குறிப்பிட்டோம்.

தமிழர்களின் நினைவேந்தல் உரிமை தொடர்பாக நேற்று முன்தி னம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் தந்த வழிகாட்டல் நடவடிக்கை மிக முக்கியமான ஒன்று. அது குறித்து நேற்று மாலை இப்பத்தியில் விரிவாகப் பார்த்தோம்.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றங்கள் இவ் விடயத்தை ஒட்டித் தமது முடிவை இன்னும் அறிவிக்கவில்லை. திங்கள் அல்லது செவ்வாய் அவற்றின் முடிவு கிட்டும்.

ஆனால், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஊர்காவற்றை, மூதூர், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றங்கள் பொது நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தி ருக்கின்றன.

ஆனால், மல்லாகம் நீதிமன்றம் மட்டும் நிதானமாக – வேறு வித மாக – இந்த விடயத்தைக் கையாண்டுள்ளது. பொது நினை வேந்தல் களைத் தடுக்கும் உத்தரவை ஒரு தலைப்பட்சமாக வழங்குவதற்கு அது மறுத்து விட்டது.

ஒரே விடயத்துக்கு, ஒரே நிலையில் உள்ள நீதிவான் நீதிமன்றங்கள் வெவ்வேறான முறைகளில் கையாண்டு, முற்றிலும் வேறுபட்ட – ஒன்றுக்கொன்று தலைகீழான – உத்தரவுகளை விடுக்க முடியுமா, அது நீதியா என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

ஆனால் நீதிமன்றங்கள் அப்படியான உத்தரவுகளை வழங்கிய மைக்கும் காரணங்கள் உண்டு.

மல்லாகம் நீதிமன்றம் பொலிஸாரின் விண்ணப்பம் தொடர்பில் ஒரு தலைப்பட்சமாக முடிவை எடுக்காமல், எதிராளிகள் தரப்புக் கருத்தையும் உள்வாங்கியே தீர்மானத்தை எடுத்துள்ளது.

இப்படி இந்த விடயத்தில் எதிராளிகள் தரப்பின் வாதத்தை – கருத்தை – கவனத்தில் எடுத்த யாழ் நீதிவான் நீதிமன்றம், பருத் தித்துறை நீதிவான் நீதிமன்றம் போன்றவையும் தமது உத்தரவை தள்ளிவைத்துள்ளனவே தவிர, பொலிஸார் கேட்ட கோரிக்கையை ஏற்று இன்னும் உத்தரவை வழங்கவில்லை.

ஆனால், ஒரு தலைப்பட்சமாக பொலிஸாரின் விண்ணப்பத்தை மட்டும் பரிசீலித்து, கவனத்தில் எடுத்த நீதிவான் நீதிமன்றங்கள் மட்டுமே நினைவேந்தலுக்குத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள் ளன. அவை மறுதரப்பாகிய – எதிராளிகளான – தமிழ்ப் பிரமுகர்களின் கருத்தையோ, சட்ட வாதங்களையோ உள்வாங்கவில்லை என்பது கண்கூடு.

எனவே இத்தகைய நீதிமன்றங்களுக்கு தமிழ் மக்களின் – தலை வர்களின் – பக்கத்தில் உள்ள நியாயங்கள், கருத்துகள் தெளிவு படுத்தப்பட வேண்டும். பொலிஸ் தரப்பினால் ஒரு தலைப்பட்சமாக முன்வைக்கப்பட்ட வாதங்கள் சட்ட ரீதியாக முறியடிக்கப்பட வேண்டும். மல்லாகம் நீதிமன்றத்தில் நியாயம் கிடைப்பதற்காக எதிராளிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட அதே சட்ட வாதங்கள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, மூதூர், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றங்களிலும் முன்வைக்கப்பட்டு அதன் மூலம் அந்த நீதிமன்றங்களின் முன்னைய – நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்கின்ற – உத்தரவுகளைத் திருத்த நடவடிக்கைகள் எடுக் கப்பட வேண்டும்.

அதுவும், அடுத்த ஓரிரு தினங்களில் இந்த சீராய்வு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்கள் உரிய காலத்தில் தமக்குரிய நினைவேந்தல் உரிமையை தவறாது நிலைநிறுத்தி முன்னெடுக்க முடியும்.

தமிழ் சட்டத்தரணிகளின் முன்னால் இந்தப் பாரிய பொறுப்பு காத்திருக்கின்றது.

## புலமைப் பரிசிலில் வட மாகாணத்தில் முதலிடம் பெற்ற மகாஜன மாணவிக்கு சுமந்திரன் வாழ்த்து!



2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரி சில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி சுபாஸ்கரன் ஜனுஸ்கா 198 புள்ளிகள் பெற்று வடக்கு மாகாணத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

வடமாகாணத்துக்கு பெருமை சேர்த்த மாணவி ஜனுஸ்காவை நேற்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணி யுமான எம்.ஏ.சுமந்திரன், மாணவியின் இள வாலை இல்லத்துக்குச் சென்று ஜனுஸ்கா வின் கல்வி உயர்வுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, மாணவி ஜனுஸ்காவையும் கல்லூரி அதிபர் ம.மணி சேகரனையும் மாலை அணிவித்துக் கௌர வித்தார்.

சுமந்திரனுடன் வடக்கு மாகாணசபை முன் னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான லயன் சி.ஹரிகரன், பா.மரியதாஸ் மற்றும் அனோஜன் ஆகியோர் சென்று மாணவிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## சேர். பொன். இராமநாதனின் 90 ஆவது குரு பூசை நேற்று







சைவப் பெருவள்ளலாரும், பரமேஸ் வராக் கல்லூரியின் தாபகருமாகிய சேர். பொன். இராமநாதனின் 90 ஆவது குரு பூசை நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை, ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை மற்றும் யாழ். பல்கலைக்கழக இந்து மன் றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நேற்றுக் காலை 8 மணிக்கு பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள பார்வதி சமேத பரமேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூஜை, வழிபாடுகள் இடம்பெற்றமையுடன், பல் கலைக்கழகத்தினுள் இருக்கும் உருவச் சிலைக்கும், சபா மண்டபத்தில் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தரினால் மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத் தப்பட்டது.

குறித்த குரு பூசைநிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரி யர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் தலைவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்

## பாடசாலைகள் திங்கள் ஆரம்பம் ரியூஷனுக்கு இன்னும் இல்லை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.22

மேல்மாகாணம் மற்றும் தனிமைப்படுத் தல் பிரதேசங் கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் முன் றாம் தவணைக்காக நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள போதும் தனியார் கல்வி நிலையங்களுக்கான அனுமதி இன்ன மும் வழங்கப்படவில்லை என யாழ் மாவட் டச் செயலர் கே.மகேசன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப, தேசிய கொரோனா தடுப்புச் செயல ணியின் தீர்மானத்துக்கு அமைவாக தடைசெய்யப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் நாளை திட்ட மிட்டபடி அரச மற்றும் தனியார் பாடசாலை கள் ஆரம்பமாகவுள்ள நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட வில்லை. தேசிய மட் டத்தில் அனுமதி கிடைக் கும் பட்சத்தில் அவற்றுக்கான அனுமதி வழங் கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2020

'மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச் சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.'

- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

முருகபூபதி

# தற்காலத் தமிழ் அகராதியில் ஈழத் தமிழ்ச் சொற்களையும் இணைத்த மூத்த பதிப்பாளர்




இம்மாதம் 17 ஆம் திகதி அதிகாலை சென்னையில் கொரோனோ தொற்றினால் மறைந்த மூத்த பதிப்பாளரும் இலக்கியவாதியுமான க்ரியா இராமகிருஷ்ணனுக்காக நினைவேந்தல் இணைய வழி காணொல் அரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. சிட்னி, ஆஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ( A.T.B.C ) வானொலி ஊடகவியலாளரும், எழுத்தாளருமான கானா. பிரபா ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியில் தமிழ்நாட்டிலிருந்து பேராசிரியர் அ.ராமசாமி, ஆவணப்பட இயக்குநர் அம்ஷன்குமார், பதிப்பாளர் வேடியப்பன், அமெரிக்காவிலிருந்து எழுத்தாளர் ரீதர் நாராயணன், ஆஸ்திரேலியாவிலிருந்து எழுத்தாளர் முருகபூபதி ஆகியோரும் உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் முருகபூபதி சமர்ப்பித்த உரை இது.

மூச்சுவிடாமல் பேசியவாறு தமிழுக்கு அரும்பணியாற்றியவர்களை பார்த்திருக்கின்றோம். மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்த வேளையிலும் தமிழுக்கு தனது அரிய தொண்டினை செய்திருப்பவரைப் பற்றி முன்னர் கேள்விப்பட்டிருப்போமா..?

அப்படியும் ஓர் அற்புதமான மகத்தான மனிதர் எம்மத்தியில் வாழ்ந்திருக்கிறார் என்ற செய்தியையும் எமக்கு வரவாக்கிவிட்டு, தனது கொடிய கரங்களை உலகெங்கும் விரித்து பரப்பிக்கொண்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போராடிக்கொண்டே, சமூக இடைவெளி பேணியவாறு இக்காணொலியில் நாம் இணைந்திருக்கின்றோம்.

க்ரியா இராமகிருஷ்ணனும் நிரந்தரமாக விடைபெற்றுவிட்டார் என்ற செய்தி கிடைத்தபோது ஒரு கணம் அதிர்ந்துவிட்டேன். அதற்கு முன்னர் நாம் மதித்த மரியாதை செலுத்திய மேலும் சில கலை, இலக்கிய, ஆளுமைகளை - எஸ்.பி. பாலசுப்பிரமணியம் உட்பட - இந்த கண்ணுக்


நாவலர் நெடுஞ்செழியனும் கருணாநிதியும்

குத் தெரியாத எதிரியிடம் பறிகொடுத்துவிட்டோம். இலட்சக்கணக்கான மக்களுடன் இவர்களும் சென்றுவிட்டனர்.

மேலும் இலட்சக்கணக்கானோர் இன்னமும் தொடர் சிகிச்சையிலிருக்கின்றனர். பலர் இதிலிருந்து மீண்டும் முற்றாக மீளமுடியாமல் தவிக்கின்றனர்.

க்ரியா இராமக்கிருஷ்ணன் மறைந்த செய்தி கேட்டதும் அதன் அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்காக அவருக்கான குறிப்பினை எழுதி, அவரது ஆத்மாவுக்கு அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தபோது, சோவியத் நாட்டைச் சேர்ந்த மற்றும் ஒரு தமிழ் அபிமானி - பாரதி இயல் ஆய்வாளர் பேராசிரியர் அலெக்சாந்தர் எம் துபியான்ஸ்கி அவர்களையும் இந்த பாழாய்போன கொரோனா இழுத்துக்கொண்டு சென்றுள்ள செய்தி வந்தது.

இரவு உறக்கத்திற்குச் செல்லும் போதும், காலையில் பொழுது விடியும்போதும், இந்த எதிரியின் அழைப்பில் எமனிடம் செல்பவர்களின் எண்ணிக்கையை கேட்டுக் கொண்டு வாழும் ஓர் அவல வாழ்க்கையை நாம் கடந்து கொண்டிருக்கின்றோம்.

பல வருடங்களுக்கு முன்னர் 1982 ஆம் ஆண்டு எமது தாயகம் இலங்கைக்கு அச்சமயம் தமிழக அரசில் அமைச்சராக பதவியிலிருந்த நாவலர் நெடுஞ்செழியன், இலங்கை தமிழ்மொழி அமுலாக்கல், இந்து சமய விவகார அமைச்சர் செல்லையா இராசதுரையின் அழைப்பில் பாரதி நூற்றாண்டு விழாவுக்கு வருகை தந்து, கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் உரையாற்றினார். அச்சமயம் இந்திய இசை மேதையும் ஜெயகாந்தனின் நண்பருமான எம்.பி. ரீநிவாசனும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

## க்ரியா இராமகிருஷ்ணன் நினைவுப்பகிர்வு

அந்த மேடையில் பேசிய அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், தமிழில் சும்மா என்ற சொல் அகராதியிலும் இல்லை. சும்மா இருக்கும் சோம்பேறிகளுக்காக உருவாக்கப்பட்ட சொல்தான் இந்த சும்மா என்று சொன்னார்.

அந்த நிகழ்ச்சிக்குப்பின்னர் கொழும்பு பிறைட்டன் விடுதியில் நாம் இசையமைப்பாளர் எம்.பி. ரீநிவாசனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டபோது, அமைச்சரின் அந்த சும்மா பற்றிய உரை குறித்து விமர்சித்துக்கொண்டோம்.

கடந்த இரண்டாயிரமாம் ஆண்டு மறைந்த நாவலர் நெடுஞ்செழியன், அவருக்கு அருகிலேயே வாழ்ந்த க்ரியா இராமகிருஷ்ணன் 1992 இல் முதல் பதிப்பாக வெளியிட்ட க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியை பார்த்துவிட்டுத்தான் மறைந்தாரா..? என்பது எமக்குத் தெரியாது.

இலங்கையில் நான் வாழ்ந்த காலப்பகுதியில், எமது நண்பரும் தற்போது லண்டனில் வதிபவருமான பத்மாநாப அய்யர், எமக்கு அடிக்கடி சொல்லும் பெயர்தான் க்ரியா இராமகிருஷ்ணன். இலங்கை எழுத்தாளர்களுக்கும் தமிழக எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்களுக்குமிடையில் பத்மநாப அய்யர் பாலமாகவே விளங்கியவர். அவரும் பல நூல்கள், மலர்களின் வெளியீடுகளில் அர்ப்பணிப்புடன் உழைத்தவர்.

அதனால், மற்றும் ஒரு அர்ப்பணிப்பாளர் க்ரியா இராமகிருஷ்ணன் பற்றி எம்மிடம் அவர் விதந்து குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லை.

1970 இற்குப்பின்னர் இலங்கையில் நான் இலக்கியப் பிரதிகள் எழுதத்தொடங்கிய காலப்பகுதியில், பத்மநாப அய்யர்தான் எமக்கு எழுத்து, கொல்லிப்பாவை, கசடதபற, வானம்பாடி, தீபம் முதலான தமிழக சிற்றிதழ்களை அறிமுகப்படுத்தினார்.

இவற்றில் கசடதபற இதழில் நா.கிருஷ்ணமூர்த்தி.


பேராசிரியர் எம். ஏ. நுஃமான்

கூத்துப்பட்டறை நா.முத்துசாமி , சா.கந்தசாமி ஆகியோருடன் பின்னாளில் இணைந்துகொண்டவராகத்தான் க்ரியா இராமகிருஷ்ணனைப்பற்றி அறிந்துகொண்டோம்.

தரமான படைப்புகளை பிரசுரிப்பதும் தரமற்ற படைப்புகளை விமர்சிப்பதும் கசடதபறவின் நோக்கமாக இருந்தது. அக்காலப்பகுதியில் வெளியான ஜெயகாந்தனின் ஞானரதம் இதழில்தான் நாம் ஜி. நாகராஜனின் நாளை மற்றும் ஒரு நாளே நாவலையும் படித்தோம். அதனை தனி நூலக வெளியிடுவதற்கும் ஜெயகாந்தன் பல பதிப்பகங்களின் வாசல்களையும் தட்டியிருக்கிறார்.

ஏனைய இதழ்களினால் புறக்கணிக்கப்பட்ட தரமான படைப்புகளை ஞானரதத்திற்கு தாருங்கள் என்றும் ஜெயகாந்தன் அச்சமயத்தில் வெளிப்படையாக எழுதியிருந்தார்.

இக்காலப்பகுதியில் அதாவது 1974 இல் தமது முப்பது வயதில் க்ரியா பதிப்பகத்தினை இராமகிருஷ்ணன் உருவாக்கியிருக்கவேண்டும் என நினைக்கின்றேன்.

அவுஸ்திரேலியா மெல்பனில் வாழ்ந்து இந்த ஆண்டு தொடக்கத்தில் சிட்னியில் தமது 98 வயதில் மறைந்த எழுத்தாளர் கலைஞர் கலைவளன் சிசுநாகேந்தின் தொகுத்து வெளியிட்ட பழகும் தமிழ்ச்சொற்களின் மொழி மாற்று அகராதியின் வெளியீட்டு நிகழ்வில் நான் உரையாற்றும்போதும், க்ரியா இராமகிருஷ்ணன் பற்றித்தான் நினவுபடுத்திப் பேசியிருந்தேன்.

அவர் விளம்பரத்துறை பணியிலிருந்து பதிப்புத் துறைக்கு வந்தவர். சிறந்த நூல்களை வெளியிடவேண்


க்ரியா எஸ். ராமகிருஷ்ணன்

டும் என்பதில் இறுதிவரையில் மிகுந்த அக்கறையோடு இருந்தவர். ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களையும் பதிப்பித்தவர்.

பலருடனும் இணைந்து பணியாற்றுவதற்கு விசேட குணாதிசயங்கள் வேண்டும். தனிப்பட்ட விருப்பு வெறுப்பு பார்க்காமல், தன்முனைப்பு - மேலாதிக்க சிந்தனையற்றிருக்க வேண்டும். அத்துடன் பரந்த மனப்பான்மையும் வேண்டும். இந்த இயல்புகள் அனைத்தும் கொண்டிருந்தமையால்தான் க்ரியா இராமகிருஷ்ணன் அவர்களால் தற்காலத் தமிழ் அகராதியை வெளிக்கொணர முடிந்திருக்கிறது என நம்புகின்றேன்.


எமது மெல்பன் வாசகர் வட்டத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையினர் தமிழக வாசகர்கள். அவர்களுக்கு மட்டுமல்ல தமிழகத்தில் இருக்கின்ற பல வாசகர்களுக்கும், ஏன் பல தமிழக எழுத்தாளர்களுக்கும் கூட ஈழத்தின் அன்றாட தமிழ் பேச்சுவழக்குகளின் அர்த்தம் தெரிவதில்லை.

குறிப்பாக படலை என்ற சொல்லுக்கு அர்த்தம் கேட்டவர் தமிழக இலக்கிய விமர்சகர் சிட்டி சுந்தரராஜன். இது நடந்தது 1980 களில்.

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஈழத்து இலக்கியப்படைப்புகளுக்கு அடிக்குறிப்பு வேண்டும் என்றார். இது நடந்தது 1970 களில்.

1984 இல் தமிழக எழுத்தாளர் கி. ராஜநாராயணனை நான் அவரது இடைசெவல் கிராமத்தில் சந்தித்து பேசிக் கொண்டிருந்தபோது, அவர் இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடந்த கலவரத்திற்கு யார் காரணம்..? எனக்கேட்டதும், நான், அது சிங்களக் காடையர் என்றேன்.

(08ஆம் பக்கம் பார்க்க)


பத்மநாப அய்யர்

# நாட்டார் பாடல்களும் அவற்றின் வகைகளும்

நாட்டார் பாடல்கள் எல்லாத் தேசங்களிலும் காணப்படுகின்றன. இவை அத்தேசங்களின் சொத்து ஆகும். நாடோடிப் பாடல்களே கர்நாடக இசையின் அத்திவாரம் ஆகும். சாதாரண தொழிலாளர்கள் வேலைக் களைப்புத் தெரியாமல் சந்தோமாகப் பொழுதைக் கழிப்பதற்காக எழுந்த பாடல்களே நாட்டுப் பாடல்கள் ஆகும். மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவை நாட்டுப் புறப் பாடல்களாகும். இவை கிராமியப் பாடல்கள் , பாமரஜனகானம், பொதுஜன கானம், சமூதாயப் பாடல், நாடோடிப் பாடல் என்றும் அழைக்கப்படும்.

கிராமியப் பாடல்களின் சாகித்தியம் தொழில் சம்பந்தமாக, காதல் வியமாக, பொது வியங்களாக அமையும். பேச்சு வழக்குச் சொற்கள் கையாளப்படும். எளிய, இனிய கவர்ச்சிகரமான இசை அமைப்பில் அமைந்திருக்கும். பல்லவி, அனுபல்லவி போன்ற அங்கங்கள் இடம்பெறா. சாபுதாளங்களிலும் ஆதிரூபகம் போன்ற தாளங்களிலும் திஸ்ர சதுஸ்ர நடைகளிலும் பெரும்பாலும் அமைந்துள்ளன. பெரும்பாலானவை சம எடுப்பில் அமைந்த பொழுதிலும் அதீத அநாகத எடுப்புகளிலும் கூட நாட்டுப் பாடல்கள் உள்ளன. அனேகமான பாடல்கள் ஒன்று அல்லது ஒன்றரை ஸ்தாயியிலேயே அமைந்துள்ளன. இதனால் அதிக பாடல்கள் மத்திம ஸ்ருதியிலேயே பாடப்படுகின்றன. செய்யுள் நடை , இலக்கண சுத்தம், கமகம், சங்கதி போன்ற இசை இலக்கணங்களும் நாட்டுப் பாடல்களில் இடம்பெற மாட்டா.

ஆனந்தபைரபி, நாதநாமக்கிரியை, நீலாம்பரி, புன்னகவராளி, குறிஞ்சி, நவரோஸ் போன்ற இராகங்களில் நாட்டுப் பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்களில் பிரதிமத்திமம் இடம்பெறுவதில்லை. வேலை செய்யும் பொழுது உழவுப் பாடல் , ஓடப்பாட்டு, பூசாரிப் பாட்டு, அரிவிவெட்டுப் பாடல், பொலிப் பாடல், ஏற்றப் பாடல், தேயிலை கொய்தல் பாடல் என்பனவும் விசேஷ காலங்களில் நலங்குப்பாடல், ஆராத்திப் பாட்டு, ஊஞ்சல்பாட்டு, லாலி என்பனவும், ஓய்வாக உள்ள போது மனஅமைதிக்காகவும் புதிர்பாட்டு, பழமொழிப்பாட்டு, கோமாளிப்பாட்டு, கும்மி, கோலாட்டம் என்பனவும், குழந்தைகளை நித்திரை ஆக்குவதற்கு தாலாட்டுப்பாடலும், இறப்பு வீட்டில் ஒப்பாரியும், மேலும் குழந்தைகளின் பாடலாக விளையாட்டுப் பாடலும் இறைவனைத் துதித்து காவடிச்சசிந்து, நொண்டிச்சிந்து போன்றவையும் பாடப்படுகின்றன.



### ஊஞ்சல்

இது ஆண்களை விட பெண்களே அதிகம் விளையாடுவார்கள். மரங்களில் உள்ள மரக்கிளைகளில் கயிற்றைக் கட்டி அதில் பலகை பொருத்தி அதில்



அமர்ந்து கொண்டு காலால் உன்னி உன்னி முன் பின்னாக ஆடப்படுவது ஊஞ்சல் விளையாட்டு ஆகும். ஊஞ்சல் ஆடுதல் என்பதிலிருந்து ஊஞ்சலாடுதல் என வந்தது. கம்பிகள், சங்கிலிகள் போன்றவற்றால் அமைக்கப்பட்டு விளையாடப்படுவது தற்கால விளையாட்டாகும். சங்க காலத்திலும் ஊஞ்சல் காணப்படுகின்றது. பெண்கள் தம் தோழியரோடு ஆடப்படுவது ஊஞ்சல் பாட்டு ஆகும்.

தலைவன் அல்லது தலைவி இறைவன் அல்லது இறைவியின் பெருமைகளை சித்திரிப்பதாக இந்த ஊஞ்சற்பாக்கல் அமைகின்றன. பூப்புனித நீராட்டுவிழா, திருமண விழாக்களில் ஊஞ்சலாடும் வைபவத்தை இன்றும் அருமையாகக் காண்கின்றோம். இந்துக் கோயில்களில் இறைவன் அல்லது இறைவியை ஊஞ்சல் ஆட்டும் போது ஊஞ்சற்பாடல் பாடப்படுகின்றது. 10 - 20 பந்திகள் வரை இப்பாடல்கள் அமைந்துள்ளன.

### கும்மி

இது ஆடலும் பாடலும் சேர்ந்த ஓர் கிராமிய நிகழ்ச்சியாகும். கும்முதல் என்றால் கொட்டுதல்



என்று பொருள். தமிழ் நாட்டில் மிகப் பழைய காலம் தொடக்கம் இது வழக்கிலுள்ளது. ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திவாரகம் என்றும் நாகண்டில் மகளில் கை கொட்டிப் பாடி ஆடுவது கொம்பல் எனப்பட்டது. பின்னர் அருட்பாவில் கொம்பி எனப்பட்டுக் காலப்போக்கில் கும்பி ஆகியது.

இளம் பெண்கள் குத்துவிளக்கு அல்லது திருவுளச் சிலையை நடுவில் வைத்து அதைச் சுற்றி வட்டமாக நின்று குனிந்தும் நிமிர்ந்தும் வளைந்தும் கைகொட்டி ஆடிப்பாடும் நிகழ்ச்சி கும்மி ஆகும்.

### கோலாட்டம்

இரு சிறு வர்ணக் கோல்களால் தாளத்திற்கேற்ப தட்டி ஆடப்படுவது கோலாட்டமாகும். இதுவும் பெண்களுக்குரிய கிராமிய ஆடல் வகை எனினும் ஆண்களும் கோலாட்டம் ஆடுவது வழக்கம். கும்மி அடிப்பது போன்றே கோலாட்டமும் கோல்களின் உதவியுடன் ஆடப்படுகின்றது. கோலாட்டத்திற்கு ஒரு வகை பின்னல் கோலாட்டமாகும். 8 அல்லது 12 கயிறுகள் ஆகும். அரங்கின் உயரத்தில் கட்டப்பட்டு அதன் ஒரு நுனி ஆடுபவரின் ஒரு கையில் சுற்றப் பட்டிருக்கும் ஆடிக்கொண்டே ஒழுங்கு முறையில் ஏற்றிவருவதன் மூலம் கயிறு பின்னப்படும். பின்பு அதே ஒழுங்கில் ஆடிக்கொண்டே அவிழ்க்கப்படும். இவ் ஆட்டத்தை ஆடுவதற்கும் அதில் பங்கேற்கும் அனைவருக்கும் மிகுந்த நிதானம் தேவை.



### ஆலயங்களும் இசையும்

‘பண்ணும் பதமேழும் பல ஓசைத் தமிழ் அவையும் உள் நிற்கின்றதோர் சுவையும் உறு தாளத்தொலி பலவும்’ என்பது திருஞானசம்பந்தரின் அருள் வாக்கு. சுந்தரமூர்த்தி நாயனார் ‘ஏழிசையாய் இசைப்பயனாய்’ என்று பாடினார். இசையையும் இறைவனையும் பாலுடன் கலந்த நெய் போல ஒன்றை விட்டொன்று பிரிக்க முடியாது என்பது ஆன்றோர் கருத்து. இறைவனை அடைய இலகுவான வழி இசையே என்பது அனைவரும் அறிந்த உண்மை. இராவணண் இசை பாடிக் கயிலாய் மலையைப் பெயர்த்தான் என்பதை இதிகாச வாயிலாக அறிய முடிகிறது.

ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடமாகும். எனவே ஆன்மாக்களை இசை மூலம் நல்வழிப்படுத்தி இறைவனை அடையச் செய்வதில் ஆலயங்கள் பெரும் பங்காற்றி வந்துள்ளன. ஆலயங்கள் ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கு மானியமும் வழங்கி வந்ததை அறிகின்றோம்.

சிந்துவெளி நாகரீக காலத்தில் மொக்கஞ்சதாரோ, ஹரப்பா நகரின் அகழ்வாராய்சி மூலம் கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் பல இசை வாத்தியங்களுடன் காணப்படுகின்றன. இவை இசை மூலம் மக்கள் இறைவனை வழிபட்டனர் என்பதற்கு சான்றாகும். இந்து மதத்தில் மட்டுமின்றி எல்லா மதங்களும் இறைவனை அடைய ஆன்மீக நெறியில் முதிர்வடைய இசையையே கைகொள்கின்றனர்.

இந்து ஆலயங்களில் அமைப்பை நோக்கினால் எமக்கு தூரத்திலே வரும் பொழுதே இறையுணர்வை ஏற்படுத்துவது ஆலயங்களின் கோபுரமாகும். கோபுரத்தின் அமைப்பை நோக்கினால் இராகங்களின் ஆரோகண அவரோகணத்தை அது எம் கண்முன் நிறுத்துகின்றது. உள்ளே செல்லும் பெருவாயில் ஒன்று. அதற்கு மேலே கோபுரத்தில் சிறு வாயில்கள் 56 என வெவ்வேறு விதமாக அமைந்துள்ளன. நுழைவாயில் பெரிதாக அமைந்துள்ளது. 7 வாயில்கள் சம்பூர்ண ஸ்வரங்களையும் 6 வாயில்கள் ஜடவ இராகங்களையும் குறிக்கின்றன. கோபுரங்களில் காணப்படும் சிற்பங்களில் சிவனின் கையில் உடுக்கு, சரஸ்வதி கையில் வீணை, கண்ணன் கையில் புல்லாங்குழல், நாரதரின் கையில் தம்புரா என்பவை வாத்தியங்களின் தொன்மையை எடுத்து காட்டுகின்றன. இசைக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்புகளை எடுத்தியம்புவனவாய் உள்ளன.

ஆலயத்தினுட் செல்லும் போது மணி, சேமக்கலம், பேரிகை, என்னும் வாத்தியங்கள் இசைக்கப்படுகின்றன. பூசைக் காலங்களை அறிவிக்க கண்டாமணி இசைக்கப்படுகிறது. பூசை நேரத்தில் தேவார பாராயணம் நடைபெறுகின்றது. பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது. விசேட காலங்களில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி , தேவிதோத்திரம் , அபிராமியந்தாதிப் பாடல்கள், சகலகலாவல்லி மாலை என்பன பாடப்படுகின்றன. திருவிழாக்காலங்களில் ஊஞ்சற்பாக்கள், நலங்கு, லாலி, பராக்கு, மங்களம் என்பன பாடப்படுகின்றன. நாதஸ்வரம், தவில் என்பன இசைக்கப்படுகின்றன. இறைவனை வழிபடும் பொழுது இறைவனுடன் ஒன்றித்து விடும் உணர்வினைப் பெறுகின்றோம்

செல்வி. தர்சினி ஞானேந்திரன்
கம்சப்பிரியா இசைக் கல்லூரி
நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை ஆசிரியர்

உற்சவ காலங்களில் ஆலய கொடியேற்றத்தின் பொழுதும், கொடி இறக்கத்தின் பொழுதும் நவசந்திப்பண்கள், நவசந்தித்தாளங்கள் என்பன இசைக்கப்படுகின்றன. சுவாமி வீதி உலாவின் பொழுது கொம்பு, திருச்சின்னம் என்னும் வாத்தியங்கள் கையளிக்கப்படுகின்றன. நாதஸ்வரத்தில் மல்லாரி இசைக்கப்படுகின்றது. இங்கு சுதி பேதங்கள் கையளிக்கப்படுகின்றன. சுவாமிக்கு பின்னால் பஜனை நிகழ்த்தப்படுன்றது. இங்கு தேவாரங்கள் , பக்திப் பாடல்கள் என்பன இறைவனை இறைஞ்சிப்பாடப்படுகின்றன. இன்றும் விழாக் காலங்களில் இசைக்கச்சேரிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. சங்கீத உபந்நியாசங்கள் நிகழ்த்தப்படுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இசை வளர்ச்சி குன்றியது. மட்டுமின்றி அழியும் நிலையில் இருந்த பொழுது ஆலயங்களும் ஓதுவார்களும் தவில் நாதஸ்வர விற்பனையருமே இசையைப் பாதுகாத்து வந்தனர். எனவே அன்றிலிருந்து இன்று வரை இந்து ஆலயங்கள் இசையைப் பெரிதும் பாதுகாத்து வளர்த்து வருகின்றனர் என்பதையும் இசையே இறைவனை அணுகுவதற்கு இலகுவான வழி என்பதையும் அறிய முடிகிறது.

# போர்க் குற்றத்தில் மூழ்கிய ஆஸ்திரேலியா இலங்கைக்கு ஒரு முன்னுதாரணம்

சா.இரத்தினஜீவன் எச் ஹூல் (அங்கத்தவர், தேர்தல் ஆணைக்குழு)



9/11 – 2001 ஐத் தொடர்ந்து ஆஸ்திரேலிய இராணுவத்தினர் அமெரிக்கர்களுடன் சேர்ந்து ஆப்கானிஸ்தானில் போர் புரிய அனுப்பப்பட்டனர். 2014இல் ஊர் திரும்புவதற்கு முன்பு இருந்து பல போர் குற்றச் சாட்டுக்களை எதிர் கொள்ளவேண்டி இருந்தது. முதலில் இவை மறுக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் இருந்தன.

இலங்கையில் போலவே இராணுவத்தினர் தாம் கண்டதை வெளியிட பொலிஸார் அவற்றைப் பற்றி வெளியிடும் ஊடகவியலாளர்கள் மீது விசாரணைகளை ஆரம்பித்தனர். இப்போது அரசு 200 இலங்கை ஊடகவியலாளர்களது பெயரைக்கொண்ட பட்டியலை பொலிஸாரிடம் கொடுத்து விசாரிக்குமாறு சுட்டியைப்பிட்டதான விடயம் ஞாபகத்திற்கு வருகின்றது. ஆனால் ஆஸ்திரேலியாவில் ஜனநாயகம் நன்றாய் வேரூண்டியுள்ளது.



ஆனி பிரதமர் ஸ்கோட் மொரிஸன்

2017இல் ABC (அவுஸ்திரேலிய வானொலி) இக் குற்றச்சாட்டுக்கள் பற்றிய கோப்புக்களை வெளிக்கொண்டுவந்தது. ஆஸ்திரேலிய பொலிஸார் இதை வெளியிட்ட இரு ஊடகவியலாளர் மேல் இரகசிய தகவல்களை எடுத்த குற்றச்சாட்டின் பெயரில் விசாரணைகளை ஆரம்பித்தனர். ABC இன் சிட்னி தலைமையகத்தில் திடீர் சோதனையை மேற்கொண்டனர். ஆனால் அஸ்திரேலியா ஆழமாக வேரூண்டிய ஒரு ஜனநாயக நாடு. அதனால் அந்த விசாரணையைக் கைவிட வேண்டி நேர்ந்



ஆனி இராணுவத் தளபதி ஜெனரல் அங்குஸ் காம்பெல்

தது. அரசு ஊடகவியலாளர்களைப் பற்றி அல்லாமல் போர் குற்றச் சாட்டுக்களைப் பற்றி ஒரு விசாரணையை ஆரம்பிக்கத் தள்ளப்பட்டது.

அந்த விசாரணையின் 400ற்கும் மேற்பட்ட பக்க அறிக்கை கடந்த 2020 – 11 – 19 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி ஆயுதம் தரிக்காத 39 அல்லது அதற்கு கூடிய ஆப்கானிஸ்தான் பொது மக்களும், பிள்ளைகளும், மறியல்காரரும் சட்ட விரோதமாக கொல்லப்பட்டனர்.

அந்த அறிக்கையின்படி இராணுவத்தினர் இரத்தவெறி உடன் இயங்கினர். புதிய இராணுவத்தினர் ஏற்றுக்கொள்ளப்பட, ஒரு சந்தேக நபரை தலையில் சுட வேண்டி இருந்தது. இராணுவத் தளபதி அங்குஸ் காம்பெலின்படி தமது படையினர் சட்டத்தை தம் கையில் எடுத்தனர். விதிகள் மீறப்பட்டன, கதைகள் உண்டாக்கப்பட்டன, பொய்கள் பேசப்பட்டன, மறியல்காரர் கொல்லப்பட்டனர்."

ஆஸ்திரேலியா இவற்றை வெளிக்கொண்டு வந்து நிலமையைத் திருத்தி விட்டது.

ஆஸ்திரேலியருடன் இயங்கிய அமெரிக்கர் மேலும் அமெரிக்க இராணுவம் தம் விசாரணையை நடத்துகின்றது. ஆஸ்திரேலியாவில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பதவிகள், பதவி உயர்வுகள், விருதுகள் பறிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையிலோ ஜனாதிபதியும் முழு அரச கருவிகளும் அநேக ஊடகங்களும் இதே பொய்களைத் தொடருகின்றன. ஆஸ்திரேலியாவில் இவ் அறிக்கையை தொடர்ந்து ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கோட் மொரிசன் தன்னுடன் பேசி இவ்வாறு நடந்தமைக்கு தனது மிக ஆழ்ந்த துக்கத்தை தெரிவித்துள்ளார் என ஆப்கானிஸ்தானிய ஜனாதிபதி அஸ்ரஃப் காணி தெரிவித்துள்ளார். (நான் ஆஃபகானிஸ்தான் தேர்தல் வேளை சென்றபொழுது இருவருக்கும் அமெரிக்க பல்கலைக்கழக பின்னணி இருந்ததால் தனிச்சையான நட்பு எழுந்தது. விருந்துபசாரத்தின் பொழுது அவருக்கடுத்த ஆசனத்தில் இருத்தி நீண்ட நேரம் சம்பாஷித்தார். எனக்கென்று ஆட்டிறைச்சி படாத சாப்பாடு சமைத்தெடுத்து வரக் கேட்ட கலாச்சாரவாதி இவர்).



கோட்டாபய ராஜபக்ஷ

இதேநேரம் மொரிஷன் மேலும் போர் குற்ற வழக்குகளை தொடர ஒரு விசேட வழக்கறிஞரை

> அந்த விசாரணையின் 400 ற்கும் மேற்பட்ட பக்க அறிக்கை கடந்த 2020 – 11 – 19 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி ஆயுதம் தரிக்காத 39 அல்லது அதற்கு கூடிய ஆப்கானிஸ்தான் பொது மக்களும், பிள்ளைகளும், மறியல் காரரும் சட்ட விரோதமாக கொல்லப்பட்டனர்.

நியமித்துள்ளார். தளபதி காம்பெல் 2007 – 2013 காலத்தில் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பதக்கங்களைத் திரும்பப் பெறவும் கட்டளையிட்டார். மேலும் இராணுவத்தினுள் கலாச்சார, தலைமைத்துவ, மாற்றங்களை ஏற்படுத்த விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இது எமக்கு ஓர் முன்மாதிரியாக அமையுமா, கற்பனை செய்யுங்கள். அதாவது எல்லோருக்கும் தெரிந்ததாக கொலைகள் நடந்ததை எமது அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது (ஆப்கானிஸ்தானில் கொலைகள் 39 என்றபோதும் எம் மத்தியில் ஐ.நாவின் கருத்துப்படி 40 ஆயிரத்திற்கு மேற்பட்டது. ராஜன் ஹூல் எழுதிய 'பனை விழுந்தது' என்ற புத்தகத்தின் கணக்கின்படி ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டதுமான கொலைகள் ஏற்பட்டன. ஆனால் நான் இங்கு வலியுறுத்துவது இரு நாடுகளின் கொலைகளின் அணுகுமுறைகள் பற்றியதே.)



ஆப்கான் ஜனாதிபதி அஸ்ராவ் கானி

தொடர்ந்தும் கற்பனை பண்ணுங்கள். கொல்லப்பட்டவர்களின் உறவுகளிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சவேந்திரா டீ சில்வா ஆகியோர் மன்னிப்பு கேட்கின்றனர், கொல்லப்பட்டோருக்கான நினைவு தினத்தில் தமிழ் மக்களுடன் இணைந்து பங்கேற்கின்றனர். இது என்ன சமூக மாற்றத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும்! ஒரு புது இலங்கையை உருவாக்கும் அல்லவா? இவை நடக்குமா?

## சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் நேற்று திடீர் சாவு

### மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

சாவகச்சேரி வைத்தியசாலையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் திடீரென உயிரிழந்ததால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகின்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது –

காய்ச்சல் அறிகுறியுடன் காணப்பட்ட பளை – புலோப்பளையைச் சேர்ந்த ஒருவர் சாதாரண விடுதியில் கடந்த நான்கு நாள்களாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தார். நேற்று காலை அவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

அவர் தொடர்பில் விசாரித்தபோது பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வரும் அவருடைய வாகனச் சாரதி கொரோனாச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இதனால் நேற்று உயிரிழந்தவர் கொரோனாவால் உயிரிழந்திருக்கின்றாரா என்ற சந்தேகம் வைத்தியசாலை மட்டத்தில் ஏற்பட்டுள்ளது. சாதாரண விடுதியில் அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளமையால் அவருக்குத் தொற்று உறுதியானால் பாரிய ஆபத்து நிலை ஏற்படும் என்று கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் உயிரிழந்த நபரின் மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## பச்சை மட்டை, சப்பாத்துக் காலுடன் செல்வச்சந்நிதியில் பொலிஸார்!



செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் சூரன் போரில் பொலிஸார் பச்சை மட்டையுடன் நின்றமையும் சப்பாத்து கால்களுடன் நடமாடியமையும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

கொரோனா சுகாதார நடைமுறை என ஆலயத்திற்குள் பக்தர்களை அனுமதிக்காமல் வெளியே தடுக்கப்பட்டனர். எனினும், வெளியே மக்கள் முண்டியடித்தனர்.

இதேவேளை, ஆலயத்திற்குள் பச்சை மட்டையுடன் நின்று பக்தர்களை பொலிஸார் விரட்டியுள்ளனர். அத்துடன் சப்பாத்துடன் பொலிஸார் ஆலய சூழலில் நடமாடினர் எனவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## கோப்பாயில் மாவீரர் தின நிகழ்வு நடக்கும் காணி திடீர் ஆக்கிரமிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.22

கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர் நாள் கடைப்பிடித்த காணியில் இராணுவம் திடீரென முகாம் அமைத்து அப்பகுதியினையும் ஆக்கிரமித்துள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த பகுதி இராணுவத்தினரின் நிரந்தர இராணுவ முகாம் உள்ளமையினால் அதன் அருகில் உள்ள ஓர் காணியில் மாதிரி மயானம் அமைந்து ஆண்டு தோறும் அஞ்சலித்த நிலையில், இந்த ஆண்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இக் காணியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்

இவ்வாறு துப்புரவு செய்யப்பட்ட காணியில் இம்முறையும் மாவீரர் நாள் அஞ்சலி இடம்பெறும் எனக் கருதிய இராணுவத்தினர் அக் காணியில் படை முகாம் அமைப்பதோடு முட்கம்பி வேலியும் அமைத்து வருகின்றனர்.

மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெறும் என்பதற்காக இந்தக் காணி அபகரிக்கப்பட்டதா அல்லது நிரந்தரமாகவே ஆக்கிரமிக்கப்படுகின்றதா தெரியவில்லை.

## ஆபத்தான கட்டத்தை தாண்டினார் சிவாஜி

பாம்பு தீண்டிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், ஆபத்தான கட்டத்தைக் கடந்து சாதாரண நிலைக்கு வந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெள்ளி இரவு வல்வெட்டித்துறை நகர சபைக்கு அருகாமையில் உள்ள அவரது அலுவலகத்திலிருந்து வீடு செல்வதற்காக அலுவலகத்தின் கதவை அவர் மூடியபோது அதிலிருந்த பாம்பு ஒன்று கையில் தீண்டியது. ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்த சிவாஜிலிங்கம் தற்போது சாதாரண நிலைக்கு வந்துள்ளார். இதேவேளை, அவருக்குக் கடித்த பாம்பைப் போத்தில் ஒன்றில் அடைத்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அது உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் நினைவேந்தல் வாரம் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்





## பண்டிதரின் திருவுருவப்படத்துக்கு சுமந்திரன் விளக்கேற்றி அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 21

தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடி தமது உயிரை ஈந்த வீரமறவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் மாவீரர் வாரம் தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் இன்று ஆரம்பமாகியுள் ளது.

இந்தநிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த போராளியான கப்டன் பண்டிதர் என்று அழைக்கப்படும் சின்னத்துரை ரவீந்திரனின் திருவுருவப்படத்துக்கு அவரது தாயாரோடு இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சுடர் ஏற்றி - மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

வல்வெட்டித்துறை, கம்பர்மலையைச் சேர்ந்த கப்டன் பண்டிதர், 1985 ஜனவரி 9 ஆம் திகதி அச்சுவேலிப் பகுதியில் நடந்த மோதலில் உயிர்நீத்திருந்தார்.

இம்முறையும் மாவீரர் நாளில் அவரைத் துயிலும் இல்லம் சென்று நினைவு கூருவதற்கு யாரும் தடை விதிக்கக் கூடாது எனக் கோரி அவரது தாயாரான மகேஸ்வரி, யாழ். மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்த போதிலும் அது நேற்று தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கம்பர்மலையில் வசிக்கும் கப்டன் பண்டிதரின் தாயாரின் இல்லத்துக்கு இன்று காலை சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், பண்டிதரின் திருவுருவப் படத்துக்கு அவரின் தாயாருடன் இணைந்து சுடர் ஏற்றி - மலர் அஞ்சலி தூபி செலுத்தினார்.

இதேவேளை, தமிழர் விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த எங்கள் பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்தி விளக்கேற்றுவதை எவரும் தடைசெய்யக்கூடாது எனக் கப்டன் பண்டிதரின் தாயார் மகேஸ்வரி மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்.

எனது மகன் உயிர்நீத்து 30 வருடங்கள் கடந்து விட்டன. ஒவ்வொரு வருடமும், மகனுக்காக மாவீரர் நாளுக்கு விளக்கேற்றுகின்றேன். துயிலும் இல்லத்துக்குச் சென்று மகனுக்கு அஞ்சலி செலுத்தி விளக்கேற்றுவேன். இம்முறை மகனுக்கு விளக்கேற்றுவதைத் தடை செய்யக் கூடாது என்றே யாழ். மேல் நீதிமன்றத்தை நாடினேன். நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. எனவே, நான் வீட்டில் மகனுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவேன். அதை யாரும் தடை செய்யக் கூடாது என மன்றாட்டமாகக் கேட்டு கொள்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தற்காலத் தமிழ் அகராதியில் ............

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடனே அவர், "கொஞ்சம் பொறுங்கள்" எனச்சொல்லி விட்டு உள்ளே சென்று, ஒரு நோட்டுப்புத்தகம் எடுத்துவந்து, மீண்டும் சொல்லுங்கள்& அது என்ன காடையர்...?" என்று கேட்டு அர்த்தம் அறிந்து குறித்துக் கொண்டார்.

பின்னாளில் கரிசல் வட்டார வழக்கு அகராதி என்ற நூலை அவர் தொகுத்து வெளியிட்டதை அறிவீர்கள்.

சொலவடைகள் என்ற பதத்தையும் அவர் பாவித்திருக்கிறார்.

இந்த பின்னணி நிலைமைகளில் எங்கள் மெல்பனில் வதியும் தமிழக வாசகர்கள் படலை (தட்டிக்கதவு), பற்றை (புதர்), சத்தி(வாந்தி) முதலான சொற்களுக்கு அர்த்தம் கேட்பது அதிசயமான விடயம் அல்ல.

ஆஸ்திரேலியாவுக்கு சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் தனது நான்கு வயதில் வந்த எனது மகனுக்கு 'சாவுக்கிராக்கி' என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரிகிறது.

எங்கே தெரிந்துகொண்டாய்..? எனக்கேட்டதற்கு, தமிழ் சினிமாவில் என்றான். இந்த தமிழ் சினிமாதான் எமக்கு டுபாக்கூரு, கலாய்த்தல் முதலான சொற்களையும் அறிமுகப்படுத்தியது. ஜெயமோகனும் இந்த டுபாக்கூரு என்ற சொல்லை தனது கட்டுரையில் பயன்படுத்தியிருக்கிறார்.

இந்த சுவாரசியங்களின் பின்னணியில்தான் நாம் க்ரியா இராமகிருஷ்ணன் தனது நீண்ட கால உழைப்பில் எம்மிடம் விட்டுச்சென்றிருக்கும் தற்காலத் தமிழ் அகராதியை மதிப்பீடு செய்ய நேர்ந்திருக்கிறது.

இங்கு நான் குறிப்பிட்ட படலை, பற்றை, சாவுக்கிராக்கி, சும்மா, சத்தி முதலான சொற்களுக்கும் இந்த அகராதியில் அர்த்தம் இருக்கிறது.

சும்மா என்று ஒரு சொல்லே அகராதியில் இல்லை என்றார் நாவலர் நெடுஞ்செழியன். ஆனால் சும்மா, சும்மா வந்த சொல் அல்ல! அதற்கு எட்டு அர்த்தங்கள் ஏற்கனவே இருக்கின்றன என்று விளக்கமும் தந்திருக்கிறார் இராமகிருஷ்ணன்.

அத்துடன் ஆங்கிலத்திலும் மேலதிக விளக்கத்தை இவ்வாறு தருகிறார்:

**Without any purpose or motive - Without having anything to do.**

க்ரியா இராமகிருஷ்ணன் அவர்களை ஒரு சிறந்த தீர்க்கதரிசி என்றும் சொல்லலாம். கி.வா. ஜகந்நாதன், போன்றவர்கள் எம்மிடமே அடிக்குறிப்பு கேட்டுக்கொண்டிருந்த பின்னணியில், ஈழத்து இலக்கியம் பத்தாண்டுகள் பின்னிற்கிறது என்று தமிழக கங்கை இதழ் ஆசிரியர் பகீரதன் வந்து சொல்லிவிட்டுச்சென்ற கதைகளின் பின்னணியில், ஈழத்தவர்களும் தமிழ் சார்ந்த பல முன்னோடியான பணிகளுக்கு காரணமாகத் திகழ்ந்தவர்கள் என்பதை நன்கு அறிந்தும், அடுத்தடுத்து இலங்கையில் நிகழ்ந்த வன்முறைகளினால் மனித உயிர்கள் மட்டும் அழிக்கப்படவில்லை, தென்கிழக்கு ஆசியாவிலேயே பிரசித்திபெற்ற பெறுமதியான யாழ். பொது நூலகமும் தீய சக்திகளினால் தீ அரக்கனுக்கு பலியாக்கப்பட்டதையும் அறிந்தவர் அவர்.

ஈழத்து தமிழ் மக்கள் அந்நியம் சென்றாலும் தமிழைத் தக்கவைப்பார்கள் என்பதையும் அறிந்திருந்தவர். அதனால்தான் தமது ஈழ - புகலிடத் தொடர்புகளின் ஊடாக எங்கள் இலங்கை பேராசிரியர் நண்பர் நுஃமான் அவர்களையும் இணைத்துக்கொண்டு, இலங்கையில் வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் முதலான தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் புழக்கத்திலிருக்கும் தமிழ்ச்சொற்களையும் பெற்று அவற்றுக்கான அர்த்தங்களை பதிவுசெய்வதிலும் தீவிர அக்கறை காண்பித்திருக்கிறார்.

தற்காலத் தமிழுக்கென்றே அவரால் நீண்ட காலத்தேடலிலும் கூட்டு முயற்சியினாலும் உருவாக்கப்பட்ட முதல் அகராதி என்ற புகழையும் பெருமையையும் பெற்றுள்ள இந்த அகராதி, தற்காலத் தமிழில் உள்ள சொற்களின் பொருளையும் விளக்கி, அவற்றுக்கு உதாரணமான வசனங்களையும் ஆங்கில விளக்கங்களையும், அத்துடன் பொருத்தமான படங்கள் - கோட்டோவியங்களுடனும் விளக்கும் முதல் அகராதியாகவும் முதல் தரமான ஆவணமாகவும் விளங்குகிறது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு பின்னர் தமிழ்ச்சொற்களில் பேச்சு வழக்குகளில் நேர்ந்த மாற்றங்களையும் இதில் நாம் அவதானிக்கின்றோம்.

இதனை அவர் ஒரு தொழிலாகச் செய்யாமல், தவமாகவே அர்ப்பணிப்புடன் செய்தவர்.

இராமகிருஷ்ணன் அவர்களுக்கு இது விடயத்தில் தொடக்கத்தில் நிதியுதவி வழங்குவதில் உந்துதலாக இருந்த க்ரியாவின் நிறுவனர்களில் ஒருவரான ஜெயா என்ற ஜெயலட்சுமி பற்றியும் அவர் நன்றிணர்வோடு பதிவுசெய்திருக்கும் தகவலை படிக்கும்போது நெகிழ்ந்துபோகின்றோம்.

அந்த ஜெயா, தனது மரணத்திற்குப் பின்னர் தம்மிடமிருந்த சேமிப்பு முதலில் இந்த அகராதியின் வெளியீட்டுக்கே செல்லவேண்டும் என்று அதற்கான ஏற்பாட்டையும் செய்துவிட்டுத்தான் கண்களை மூடியிருக்கிறார். அதனால் இந்த அரிய ஆவணத்தை குறிப்பிட்ட ஜெயா என்ற ஜெயலட்சுமியின் நினைவுக்கே இராமகிருஷ்ணன் சமர்ப்பணம் செய்துமிருக்கிறார்.

இத்தகவலை இங்கு நினைவுபடுத்தவேண்டிய தேவை இருப்பதனால் சொல்கின்றேன்.

இந்த அகராதியின் முதல் பதிப்பு வெளியான 1992 ஆம் ஆண்டு தமிழகத்தில் பதவியில் இருந்தது முத்தமிழ் அறிஞர், கலைஞரின் ஆட்சி. அவர்தான் செம்மொழியான தமிழ் மொழியாம் பாடலையும் இயற்றி, செம்மொழி அந்தஸ்தையும் பெற்றுத்தந்தவர்.

ஆனால், அன்றைய அவரது அரசின் நூலக ஆணையம் இந்த அரிய அகராதியை கண்டுகொள்ளவில்லை. இதன் வெளியீட்டுக்கு எங்கேயோ இருக்கும் அமெரிக்க ஃபோர்ட் பவுண்டேன் உதவி வழங்கியிருக்கிறது.

தமிழரல்லாத சிங்கப்பூர் அதிபர் லீகுவான்யூ அவர்களின் அரசு, சிங்கப்பூர் பொது நூலகம் உட்பட அனைத்து நூலகங்களுக்கும் அங்குள்ள பாடசாலைகளுக்கும் இதனை பரிந்துரைத்து கொள்வனவு செய்திருக்கிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இந்த அகராதியை தமிழகத்தின் ஒரு அரசியல் பிரமுகர் பரிசாகவும் அனுப்பியிருக்கிறார்.

க்ரியா இராமகிருஷ்ணனின் மறைவுக்குப்பின்னர்தான். இந்தச் செய்திகள் கசிந்திருக்கின்றன.

செம்மொழியான தமிழ் மொழியாம் வெறும் ஏட்டுச்சுரைக்காயா...?

க்ரியாவின் பிதா மகர் மறைந்ததும் தமிழகத் தலைவர்கள. - முக்கியமாக தற்போதைய முதல்வர் முதல் எதிரணி தலைவர்கள் வரையில் - இரங்கல் செய்தி வெளியிட்டனர். நடிகர் கமல்காசன் உட்பட.

அரசுகள் செய்திருக்கவேண்டிய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணையகம் செய்திருக்கவேண்டிய மகத்தான அரும்பணியை அயர்ச்சியின்றி செய்திருக்கும் இராமகிருஷ்ணன் அவர்கள் மூச்சுவிடத் திணறியபோதும், திருத்திய புதிய பதிப்பினை தந்துவிட்டுத்தான் விடைபெற்றிருக்கிறார்.

எனவே அவர் விட்டுசென்றிருப்பது இந்த அகராதியை மாத்திரமல்ல, இனிமேலும் இந்தத் துறையில் ஈடுபட வேண்டியவர்கள் என்ன செய்ய வேண்டும்...? எப்படிச்செய்யவேண்டும்! என்ற செய்தியையும்தான்.

அவருடைய இந்த உழைப்பில் பங்கேற்ற அகராதி உருவாக்கிய குழுவின் தலைவராக விளங்கிய பேராசிரியர் இ. அண்ணாமலை சொல்லியிருக்கும் கருத்துடன் எனது இரங்கலை நிறைவுசெய்கின்றேன்.

அகராதியில் ஒரு சொல்லின் பழைய பொருள் அருகிப் புதிய பொருள் பெருகும் பதிவுகளும் உண்டு. தமிழ்மொழி வரலாற்றில் சொல் வளர்ச்சி போல், சொல்லின் பொருள் வளர்ச்சியும் முக்கியமானது. இதைப் பற்றிய ஆராய்ச்சி குறைவாகவே இருக்கிறது. சமூக மாற்றத்தைப் பிரதிபலிக்கும் பொருள் வளர்ச்சி பற்றித் தெரிய வேண்டியது நிறைய இருக்கிறது.

தொண்டு என்ற சொல்லின் பழைய பொருள், கடவுள் காரியம், ஆண்டைக்குச் செய்யும் வேலை என்ற இரண்டு மட்டுமே. இந்தச் சொல்லின் இக்காலப் பொருள் அதன் நிலப் பிரபுத்துவப் பொருளிலிருந்து விலகி, பொதுநலச் சேவை என்னும் மதச் சார்பற்ற பொருளைப் பெற்றிருக்கிறது.

பேராசிரியர் அண்ணாமலை எம்மவர்களுக்கு சொல்லியிருக்கும் இக்கருத்திலிருந்து க்ரியா இராமகிருஷ்ணனின் அளப்பரிய மகத்தான தொண்டையும் இனம் காண முடிகிறது.

வாய்ப்புத் தந்த தம்பி கானா. பிரபாவுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி. வணக்கம்.

## பொலிஸ் மா அதிபர் நியமனத்துக்கு சி.டி.விக்ரமரத்ன பெயர் பரிந்துரை!



பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்ற பேரவைக்கு பதில் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றும் சி.டி.விக்ரமரத்னவின் பெயரைப் பரிந்துரைத்துள்ளார்.

அந்தவகையில் நாளை திங்கட்கிழமை நாடாளுமன்றப் பேரவை கூடும் போது இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டு பின்னர் ஜனாதிபதியால் நியமனம் முறைப்படி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து, அப்போதைய பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிற்கு கட்டாய விடுப்பு வழங்கப்பட்டமையை அடுத்து 33 வருடம் அனுபவம் கொண்ட சி.டி. விக்ரமரத்ன பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

இதனை அடுத்து பூஜித் ஜயசுந்தர கடந்த மார்ச் மாதம் ஓய்வு அறிவித்தமையைத்தொடர்ந்து பதில் பொலிஸ் மா அதிபராகவே பதவி வகித்து வரும் சி.டி. விக்ரமரத்ன பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிபாரிசுசெய்யப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னரும் 13 தடவைகள் பதில் பொலீஸ் மா அதிபராகப் பதவிவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.





# தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு வழி

தாய் தந்தையர் நமது தன்னம்பிக்கைக்கு முதல் முன்னோடி. ஆனால் அதை நாம் அலட்சியமாகத்தான் நினைப்போம்.

நல்ல நண்பர்களை உடன் வைத்து கொள்ளுங்கள்.

தன்னம்பிக்கை தரக்கூடிய புத்தகங்களை வாங்கிப் படியுங்கள்.

நீங்கள் எத்தனை முறை தோற்றாலும் வெட்கப் படாதீர்கள்.

துன்பம் வரும் வேளையில் அமைதியாக அல்லது சிரிப்புடன் இருக்க முடியுமானால் அது மனப்பக்குவம் இது தன்னம்பிக்கையைத் தரும்.

வெற்றி கிடைக்கும் வேளையில் அமைதியாக இருக்க முடியுமானால் அது மனப்பக்குவம். இதுவும் தன்னம்பிக்கையை தரும்.

தனக்கென கடுமையான நெறிமுறைகளை கடைபிடிப்பதுடன் பிறரிடம் எளிதான கட்டுக்கோப்பையும் எதிர்பார்ப்பதும் பக்குவம். இதுவும் தன்னம்பிக்கையை தரும்.

தினம் தினம் நாம் அனைவரும், அனுபவத்தின் மூலம், வாழ்க்கையை பற்றி ஏதாவது ஒன்றை கற்று கொண்டே தான் இருக்கிறோம். இதுவும் தன்னம்பிக்கையை தரும்.

# வாழ்க்கையைப் பற்றிய விசித்திரமான உண்மைகள்

உங்களுக்கு ஓர் ஆணை பிடித்திருந்தது. ஆனால் அவனுக்கு உங்களை பிடிக்கவில்லை . உங்களை ஓர் ஆணுக்கு பிடித்திருந்தது. ஆனால் உங்களுக்கு அவனை பிடிக்கவில்லை. கிடைத்தது பிடிக்கவில்லை பிடித்தது கிடைக்கவில்லை.

ஆசைப்பட்டது கிடைக்கவில்லை என்று ஏங்குவோம். கிடைத்ததை தூக்கி போட்டுவிட்டு வேறு எதுமேலாவது ஆசைப்பட ஆரம்பித்து விடுவோம். கிடைக்காத வரைக்கும்தான் ஏக்கம்.

ஆசைப்படுவது ஆசைப்படும் நேரத்தில் கிடைக்காது. அது கிடைக்கும் நேரத்தில் அந்த ஆசையே போய்விடும்.

போதும் என்று சொல்லும் மனது நமக்கு எப்



போதுமே கிடையாது. எவ்வளவு கிடைத்தாலும் இன்னும் வேண்டும் என்றுதான் ஆசைப்படுவோம்.

இலகுவாக எதாவது கிடைத்துவிட்டால் அது எவ்வளவு மதிப்புடையதாயிருந்தாலும் அதுக்கு மதிப்பில்லாமல் போய் விடும்.

சில நேரங்களில் பிடித்ததை விட்டுட்டு வர வேண்டியிருக்கும். அது மனதுக்கு கஷ்டத்தை கொடுக்கும் தான். ஆனால் சூழ்நிலை காரணமாக அப்படி எடுக்கும் முடிவு வாழ்க்கைக்கு மேன்மையை தரும்.

ஒருவருக்கு போதும் போதும் என்று சொல்லும் அளவுக்கு கிடைப்பதுதான். இன்னொருவருக்கு கிடைக்காதா என்று ஏங்க வைக்கிறது.

இப்போ இதை செய்தால் எதிர்காலத்தில் கண்டிப்பாக வருத்தபடுவோம் என்று நினைக்கும் விடயத்தை செய்யாதீர்கள் .

ஏழைகளிடம் பணம் இருக்காது. ஆனால் நிம்மதி, ஆரோக்கியம் இருக்கும். பணக்காரர்களிடம் பணம் இருக்கும். ஆனால் நிம்மதி,ஆரோக்கியம் இருக்காது.

நல்லவர்களிடம் நல்லவன் என்கின்ற பெயர் மட்டும் தான் இருக்கும். கெட்டவர்களிடம் எல்லாம் இருக்கும்.

அளவுக்கதிகமாக அன்பு வைத்தீர்கள் என்றால் நீங்கள் யார் மேல் அவ்வளவு அன்பு வைத்திருந்தீர்களோ அவர்களுக்கே உங்களைப் பிடிக்காமல் போய்விடும்.

அன்பைக் கூட அளந்து தான் வழங்கவேண்டும் – இந்த உலகத்தில்.

வாழ்க்கையில ஏன் இப்படி நடக்கிறது என்று கேள்வி கேட்கும் வரை – தான் அது கஷ்டமாயிருக்கும். இது தான் வாழ்க்கைன்னு அதை ஏற்றுக் கொண்டோம் என்றால் எல்லாமே இலகுவாகிவிடும்.



# உங்கள் வாழ்க்கையில் இப்படி நடந்ததுண்டா?

மகிழ்ச்சி என்பது மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

இது எதனால்?

நம் மனதின் போலித் தன்மையே இதற்கு காரணம், மனதை எந்த ஒரு செயலாலும் திருப்திபடுத்த இயலாது. எப்பொழுதும் ஏதாவது ஒன்று அதற்கு தேவைப்பட்டுக் கொண்டே இருக்கும்.

நீங்கள் ஒரு மிகப்பெரிய விடயத்தை இன்று சாதித்து விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அப்போது உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?

உங்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. உங்கள் வாழ்க்கையில் அனைத்து இன்பங்களையும் நீங்கள் பெற்றதாக உணர்வீர்கள்.

சரி, இதே விடயத்தை மறுநாளும் யோசிக்கிறீர்கள். உங்களுக்கு மறுநாளும் மிக்க மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்.

இந்த விடயத்தை மூன்றாவது நாளும் யோசிக்கிறீர்கள். நான் எவ்வளவு பெரிய விடயத்தை இப்போது சாதித்து உள்ளேன் என்று. நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

ஆனால் முதல் நாளிலிருந்த அளவுக்கு நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்களா?

இல்லை. அந்த மகிழ்ச்சியின் திடம் குறைந்திருக்கும். உங்கள் மனதில் மகிழ்ச்சியின் ஆரவாரம் குறைந்திருக்கும்.

நாள்கள் செல்லச் செல்ல மீண்டும் இந்த சாதனையை யோசித்தால் உங்களுக்கு மனதில்

நம் மனதில் ஏற்படும் இன்ப துன்ப உணர்ச்சியில் அனைத்தும் மனம் செய்யும் மாய விளையாட்டுக்கள்.

மனம் என்பது ஒரு என்கவுண்டர் ஸ்பெலிஸ்ட் போன்றது. உங்களை இன்பம்/துன்பம் என்ற தோட்டாக்களைக் கொண்டு தொடர்ந்து போட்டு தள்ளிக் கொண்டே இருக்கும்.

நீங்களும் சளைக்காமல் உயிர்த்தெழுந்து கொண்டேதான் இருக்கப் போகிறீர்கள்.

இதுவே நமது மனதின் அடிப்படை கட்டமைப்பு. இதை உங்களால் மாற்ற இயலாது.

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல் உங்கள் வாழ்க்கையில் இந்த இன்ப/ துன்பங்கள் தொடர்ந்து துரத்திக் கொண்டே தான் இருக்கும்.

இவற்றிற்கு முடிவு இல்லை. இன்பம் வரும்போது நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பது போல். துன்பம் வரும்போது நீங்கள் துக்கமாகவே இருந்தாக வேண்டும். வேறு வழியில்லை.



வாழ்க்கை
தொகுப்பு -
ப்ரியமதா பயஸ்

# வாழ்க்கையில் தாமதமாக உணரும் சில உண்மைகள்



எவ்வளவுதான் பார்த்துப் பார்த்துச் செய்தாலும் சில காரியங்களில் தவறான முடிவு தான் வரும்.

யார் வாழ்க்கையிலும் உதவி செய்யலாம், ஆனால் பொறுப்பு எடுக்கக் கூடாது.

நிறைய மனிதர்களிடம் அவர்களின் ஒரு பக்க முகத்தைத் தான் பார்க்கின்றோம் .நம்மிடம் சரியாக நடந்து கொண்ட மனிதர்கள், எல்லோரிடமும் அப்படிதான் நடப்பார் என்பது உறுதியில்லை.

பணத்தை விட நம் நேரம் மற்றவர்களுக்கு மிகவும் உதவியாகவும், நமக்கு மனத் திருப்தியையும் கொடுக்கும்.

கடினமானக் காலத்தைக் கடந்து விட்டாலும் அதன் தாக்கம் பல மாதங்கள் அல்லது வருடங்கள் கூட நீடிக்கும்.

வாழ்க்கையில் இழந்த சந்தர்ப்பங்கள் திரும்பக் கிடைப்பது அரிது. அப்படி கிடைத்தாலும் நமக்கு அதே சந்தோஷத்தைத் தருமா என்பது நிச்சயமில்லை.

உடல் ஆரோக்கியம் குறையத் தொடங்கும் போது மனதைரியம் அதை விட விரைவாகக் குறையும்.

பிள்ளைகளிடம் கூட பணத்தேவைக்கு கேட்க வேண்டாத அளவு நம் சேமிப்பு பணத்தில் வாழ்வது நல்லது.

# கோரத்தாண்டவம் ஆடும் கொரோனா அழித்திட ஆன்மீக சக்தியைப் பிரார்த்திப்பதே ஒரே நெறி

## கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் வழிகாட்டல்






கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 16 நவம்பர் 2020 அன்று தீபாவளி கொண்டாட்ட நிகழ்வு கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் எஸ்.இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் சர்வமதத் தலைவர்களும் இணைந்து சுகாதார விதிமுறையை பேணும் வகையில் நடைபெற்றது.

கரித்தாஸ்கியூடெக்நிறுவன இயக்குனர்எஸ்.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தனது தலைமையுரையில் –

எமது கலாச்சாரப் பண்பாடுகள், ஆன்மீக விழுமியங்கள் கொண்டாடப்பட வேண்டும். தீயவர் அழிந்த நாளை தீபாவளியாக கொண்டாடும் போது எம்மிடம் இன்று கோரத்தாண்டவம் ஆடும் கொரோனா அழித்திட ஆன்மீக சக்தியை ஒன்றிணைத்து பிரார்த்திப்பது அவசியம்.– என்றார்.

சிறப்புரை ஆற்றிய சிவசிறீ சுபாஸ்கரக் குருக்கள் – சமயங்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவது இனமத நல்லுறவுக்குப் பலம் சேர்க்கின்றது. தீமைகள் ஒழிந்து, நன்மைகள் நடைபெற, எமது மக்களின் துயர் களைய, இறைவனை வேண்டுதல் செய்வதே ஒரே வழி. அதன் மூலம்தான் எமது நாட்டில் இன்று இருள் சூழ்ந்து கொடுமைப்படுத்துகின்ற கொரோனா வைரஸை விரட்ட முடியும். இத்தகைய விழாக்களை கொண்டாடப்படுவது சிறப்பாகும் என்றார்.

இந்நிகழ்வில் எமில் போல் அடிகளார், எரிக் றொசான் அடிகளார், யாழ் நாகவிகாரை தேரர் வண. தர்மதேரர் மற்றும் யாழ் பள்ளிவாசல் வண. மௌலவி. ஏ.எம். ரலீம் ஆகியோர் கலந்து சிறப்புரைகளை வழங்கினர்.

## பத்திரிசியார் கல்லூரியில் இருந்து 25 மாணவர் புலமைப்பரிசில் சித்தி

தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 25 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர் என யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ஏ.பி.திருமகன் அடிகளார் காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு தெரிவித்துள்ளார்.

இவர்களை வழி நடத்திய பெற்றோர், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ஏ.பி.திருமகன் அடிகளார், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

உலகெங்கும் உள்ள யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்களும் நாடுகளின் பழைய மாணவர் சங்கங்களும் தமது கல்லூரியின் வளர்ச்சியில் மகிழ்வும் பெருமையும் கொண்டு கல்லூரி அதிபருக்கு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர். காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழும் தன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக் களோடு இவர்களுடன் இணைந்து நிற்கிறது.

## பொஸ்கோ வித்தியாலய மாணவர்கள் புலமைப்பரிசிலில் வரலாற்றுச் சாதனை



தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். புனித டொண் பொஸ்கோ வித்தியாலயத்தில் இம்முறை 228 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில் 159 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு அதிகமாகப் பெற்று சித்தியடைந்துள்ளனர். பாடசாலையின் கடந்த கால சித்திகளுடன் ஒப்பிடும்போது இம்முறை சித்தி வீதம் அதிகரித்துள்ளதாகவும் இது 70 வீதமாகப் பதிவாகியுள்ளதாகவும் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி அஞ்சலிகா தெரிவித்துள்ளார்.

யாழ் புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம் மிக நீண்ட காலமாக தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சையில் தன் முத்திரையை அழுத்தமாகப் பதித்த வித்தியாலயம் ஆகும். இம்முறை அதன் சித்தி வீதம் இன்னும் அதிகரித்து 70 வீதமாகப் பதிவாகியுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி அஞ்சலிக்கா அவர்களின் ஆளுமையில் மாணவர்கள் மேலும் சிறப்புறக் கற்று வாழ்வில் முன்னேற காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்



## புனித மடுத்தினார் சிறிய குருமட சிற்றாலயம் புனரமைப்பின் பின்னர் திருப்பலியுடன் பூசை

புனரமைப்பு செய்யப்பட்ட புனித மடுத்தினார் சிறிய குருமட சிற்றாலயம் 15 நவம்பர் 2020 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

151 ஆவது ஆண்டுக்குள் காலடி பதிக்கும் இக்குருமடத்தின் தற்போதைய அதிபர் சவரிமுத்து பாஸ்கரன் அடிகளாரின் அயராத முயற்சியால் இவ்வாலயம் புனரமைப்பு செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது.





## கொவிட்-19 ஆல் உலகெங்கும் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் திருப்பலி இன்று அயர்லாந்து தலத்தில்

2020ஆம்ஆண்டில்கொவிட் – 19 கொள்ளை நோயால் உலகெங்கும் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் திருப்பலி அயர்லாந்தின் புகழ் பெற்ற கொனெக் விண்ணுலக அரசி மரியன்னை திருத்தலத்தில் 22 நவம்பர் 2020 இன்றைய தினம் அயர்லாந்தின் உயர்மறைமாவட்ட பேராயர் மைக்கல் அவர்களால் நிறைவேற்றப்படுகிறது.

நம் குடும்பங்களில் உயிரிழுந்த அனைவருக்காகவும் நவம்பர் மாதத்தில் சிறப்பான விதத்தில் செபிக்கும் அதே வேளையில் நமக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாமல் இருந்தாலும் இவ்வாண்டு உலகெங்கிலும் கொரோனாகொள்ளைநோய்க்கு பலியான அனைத்து மக்களுக் காகவும் ஒன்றிணைந்து செபிப்போம் என அழைப்பு விடுத்துள்ளார் பேராயர் மைக்கல்.

இத்திருப்பலி, வலைத்தொடர்புகள் வழியாகவும் பல்வேறு தொலைக்காட்சி நிலையங்கள் வழியாகவும் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படுகிறது. இணையம் வழியாக பங்குகொள்ளும் அனைவரும் தங்கள் விண்ணப்பங்களை இணையதளம் வழியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்ட பேராயர் ஒவ்வொருவரின் விண்ணப்பத்திற்காகவும் இத்திருப்பலியில் இறைவேண்டல் செய்யப்படும் என்கிறார்.

1879ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அன்னை மரியா தன் வலதுப் பக்கத்தில் புனித யோசேப்பையும் இடப்பக்கத்தில் நற்செய்தியாளர் புனித யோவானையும் கொண்டு அயர்லாந்தின் கொனெக் நகரில் காட்சி கொடுத்ததையடுத்து இத்திருத்தலம் அயர்லாந்தின் புகழ்பெற்ற திருத்தலமாக விளங்குகிறது.

## அமெரிக்காவின் புதிய அரசுத் தலைவரான ஜோ பைடனுக்கு திருத்தந்தை வாழ்த்து

அமெரிக்க ஐக்கிய நாட்டின் புதிய அரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடன் அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 12 நவம்பர் தொலைபேசியில் அழைத்து தனது நல்வாழ்த்துக் களைத் தெரிவித்தார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் 35ஆவது அரசுத்தலைவராகப் பணியாற்றிய கத்தோலிக்கரான ஜோண் எவ். கெனடிக்குப் பின் தற்போது கத்தோலிக்கரான ஜோ பைடன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறித்து தன் மகிழ்வை அவர் வெளியிட்டார்.

கத்தோலிக்கர் மற்றும் அமெரிக்கர்கள் என்ற முறையில் அனைவரும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர வேண்டும். இவ்வுலகில் அவரது இறையாட்சியைக் கட்டியெழுப்பவேண்டும் என அமெரிக்கப் பேராயர் கோமஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.



யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையின் 2020 - 2021ஆம் ஆண்டுகளுக் கான செயற்குழு உறுப்பினர் களை படத்தில் காணலாம்.

# சொர்க்கம் திருமண சேவை

**மணமகன் விபரம்**

பிறந்த திகதி - 1990.10.08 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - கார்த்திகை 4ம் பாதம்
தகைமை - ... Civil Engineer, msc Engineer
தொழில் - Civil Engineer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

பிறந்த திகதி - 1987.03.26 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அவிட்டம்
செவ்வாய் - 7இல் தகைமை - AL
தொழில் - Ambulance Driver
எதிர்பார்ப்பு - நற்குடும்ப பின்னணியுள்ள பெண்.

பிறந்த திகதி - 1983.06.19 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அஸ்தம்
செவ்வாய்/சூரி - 8இல் தகைமை - AL
தொழில் - மின்சார சபை
எதிர்பார்ப்பு - அரச/ தனியார் துறை மணமகள்.

பிறந்த திகதி - 1989.08.05 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - உத்தரம்
தகைமை - AL
தொழில் - சொந்த தொழில்.
எதிர்பார்ப்பு - நற்குடும்ப பின்னணியுள்ள பெண்.

பிறந்த திகதி - 1991.10.09 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - சித்திரை
தகைமை - Software Engineering
தொழில் - Engineering
எதிர்பார்ப்பு - அரச துறை.

**மணமகள் விபரம்**

பிறந்த திகதி - 1995.01.20 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அனுசம்
தகைமை - College of Education
தொழில் - Teacher எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

பிறந்த திகதி - 1983.04.29 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - .. செவ்/சூரி - 9 இல்
தகைமை - Diploma UK தொழில் - UK Assistant ...
எதிர்பார்ப்பு - விவாகரத்தான UK இல் வாழும் மணமகன்

பிறந்த திகதி - 1991.12.24 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - ஆயிலியம்
செவ் - 7 இல் தகைமை - BA
தொழில் - Teacher எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

பிறந்த திகதி - 1994.01.19 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - .. செவ் - 07 இல்
தகைமை - NVQ Level 4 தொழில் - ICT Trainer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் வெளிநாடு மணமகன்.

பிறந்த திகதி - 1987.05.08 மதம் - இந்து
ஜாதி - N நட்சத்திரம் - பூரம்
செவ் - 8 இல் தொழில் - AL
தகைமை - canada எதிர்பார்ப்பு - கனடா மணமகன்.

பிறந்த திகதி - 1983.10.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அனுசம்
செவ் - லக் தகைமை - BA
தொழில் - Development Officer
எதிர்பார்ப்பு - அரச/ தனியார் துறை மணமகன்

102/A பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். www.sorkham.com
தொடர்புக்கு - 001416661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515






## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 1667
077 3164 796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1984.05.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 22 செவ் - 04 இல்
தகைமை - Accountant தொழில் - UK PR (Company)
எதிர்பார்ப்பு - UK or இலங்கை பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி - 1983.08.20 மதம் - இந்து
ஜாதி - V பகுதி நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 53 செவ் - 10 இல்
தகைமை - AL
தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை காரைநகர் மணமகள் தேவை.

பிறந்த திகதி -1985.05.15 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராட்டாதி
கி.பா - 20 செவ்/சூரி - 4 இல்
தகைமை - B.Com தொழில் - UK PR (Company)
எதிர்பார்ப்பு - UK or இலங்கை பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி - 1985.12.21 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 30 செவ் - 04 இல்
தகைமை - B.Com
தொழில் - Bank Executive Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1987.07.23 மதம் - இந்து
ஜாதி - V பகுதி நட்சத்திரம் -மிருகசீரிடம் (4)
கி.பா - 26 சூரி/செவ் - 12 இல்
தகைமை -B.sc தொழில் - U.SA PR
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 1990.05.17 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருகோணம் (4)
கி.பா - 27 செவ் - 12 இல்
தகைமை -Cima தொழில் - Accountant Newzealand
எதிர்பார்ப்பு - Newzealand, Austalia, UK PR மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1985.04.16 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 9 செவ் -2 இல்
தகைமை -Bsc, Msc தொழில் - U.S.A PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி UK +U.S.A + இலங்கை மணமகள்.

பிறந்த திகதி - 1994.09.11 மதம் - இந்து
ஜாதி - P ஆண் நட்சத்திரம் - அனுசம் (1)
கி.பா - 24 செவ் - 06 இல்
தகைமை - AL
தொழில் - லொத்தர் U.S.A PR
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகள் U.S.A செல்ல விரும்புவர்.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1990.10.10 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - மிருகசீரிடம் (4)
கி.பா - 27 செவ் - 8 இல்
தகைமை - S.L.E.A.S (BA) தொழில் - அரச உயர் பதவி
எதிர்பார்ப்பு - அரச உயர் பதவி மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1989.12.10 மதம் - இந்து
ஜாதி - சைவம் (V) நட்சத்திரம் - பரணி
கி.பா - 40 செவ் - 10 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - சைவம் (V) அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 1992.08.10 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 40 செவ் - 9 இல்
தகைமை - S.L.A.E.A.S தொழில் - அரச உயர் சேவை
எதிர்பார்ப்பு - விரிவுரையாளர் அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1990.09.13 மதம் - இந்து
ஜாதி - P பெண் நட்சத்திரம் - திருவாதிரை (2)
கி.பா - 13 செவ் - 9 இல்
தகைமை - Bsc + Msc
தொழில் - விஞ்ஞான ஆய்வாளர்
எதிர்பார்ப்பு - Engineer, Doctor அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 1991.12.07 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம் (1)
கி.பா - 27 செவ்/ சூரி - 12 இல்
தகைமை - B.B.A, தொழில் - Management Assitant
எதிர்பார்ப்பு - அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 1985.10.221 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - திருகோணம் (2)
கி.பா - 16 செவ்/சூரி - 05 இல்
தகைமை - B.A தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.08.30 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம் (3) 5'4"
கி.பா - 30 செவ் - 1 இல்
தகைமை - Bsc, Msc தொழில் - ஆராய்ச்சியாளர்
எதிர்பார்ப்பு - அரச சேவை உயர் மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1979.05.26 மதம் - இந்து
ஜாதி - P பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 67 செவ் - 09 இல்
தகைமை - BA
தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை, தனியார் மணமகன் தேவை.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000


# யாழ் மாநகர சபை பட்ஜெட்டை கவிழ்க்கத் துடிக்கிறது முன்னணி

யாழ்ப்பாணம்,நவ. 22

யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் கள் சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என கட்சிக் கூட்டத்தில் தீர்மானித்து உறுப்பினர்களிடம் ஒப்பம் பெறப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர்களை பதிவுத் தபால் அனுப்பி கடந்த 14 ஆம் திகதி கலந்துரையாடலிற்கு கட்சித் தலைமை அழைத்திருந்தது. அவ்வாறு அழைக் கப்பட்ட கூட்டத்திற்கு மாநகர சபையில் முன்னணி சார்பில் அங்கம் வகிக்கும் 13 உறுப்பினர்களில் 8 பேர் பங்கு கொண்டிருந்தனர்.

இதன்போது கூட்டமைப்பின் ஆளுகை யில் உள்ள யாழ்ப்பாணம் மாநகர சபை யின் 2021ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டம் சபைக்கு வரும்போது முன்னணி உறுப்பினர்கள் அனை வரும் அதனை எதிர்க்க வேண்டும் எனவும், இரக சிய வாக்கெடுப்பு கோரினால் முதல் வரிசையில் உள்ள முன்னணி உறுப்பினருக்குக் காண்பித்தே வாக்களிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறை வேற்றியுள்ளனர் எனக் கூறச்சப்பட்டது.

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பதி வில் கூட்டத்தில் கலந்து கொண்ட 8 உறுப்பினர்களி டமும் ஒப்பம் பெறப்பட்டுள்ளது.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நல்லூரில் மாவீரர்களுக்கு அஞ்சலி!

## திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்தில்



மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான நேற்று (சனிக்கிழமை), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், நல்லூரில் சுடர்ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தியாக தீபம் தீலீபன், உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த நல்லூர் திடலிலேயே, இந்த அஞ்சலி நிகழ்வு இன்று இடம்பெற்றுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக ஒரு சிலர் மாத்திரம், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, அஞ்சலி செலுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றுக்குள்ளான கைதிகளுக்கு உள்நாட்டு மருந்துகளை வழங்கத் தீர்மானம்

## சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் சிறைக் கைதிகளுக்கு உள்நாட்டு மருந் துகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சிறை கைதிகளுக்கு கொரோனா தொற்று விரைவில் பரவுவதைக் கருத்திற்கொண்டு, கைதி கள் மற்றும் சிறை ஊழியர்களுக்கு சுதேச மருத்துவ முறைகளை அறிமுகப்படுத்தத் திட்டமொன்று மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது கொரோனா தொற்றாளர் ஒக்ரோபர் 03 ஆம் திகதி அடையாளம் காணப்பட்ட போதிலும் ஒரு மாதம் சென்றுதான் சிறைச்சாலைக்குள் கொரோனா தொற்றுப் பரவியது என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

தற்போது சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் தேசிய வைத்திய அதிகாரிகளும் இணைந்து சிறைக் கைதிகள் மற்றும் சிறைச்சாலை ஊழியர்களுக்கு ஆயுர்வேத சிகிச்சை முறையை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஆயுர்வேத சிகிச்சை முறையை நீண்ட காலத்துக்கு முன்னெடுத்துச் செல்லத் திட்டமிட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிறைச்சாலைத் துறையுடன் இணைந்து பாரம்பரிய முறையில் ஆயுர்வேத சிகிச்சைக்குத் தேவையான மூலப் பொருள்களை எதிர்காலத்தில் பயிரிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவ தாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

BRRENS FASHION PLANET Signature Reborn
பிறென்ஸ் பஷன் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ரெடிமேட் ஆடைகள்



எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமாக திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.

075 527 9110
077 332 1937
021 2221 2777

சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

Fb. Brrens Fashion Planet
Email . brrensfashionplanet@gmail.com

நிலைவேந்தல் நீடிக்குமா?

முற்றிலும் மாறுபட்ட தனித்துவமான கட்டுரைகளுடன்

19 ஆவது இதழ் வெளிவந்து விட்டது




வாசகர்களின் தனிமதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

அனைத்து முகவர்களிடமும் கேட்டு வாங்குங்கள்

அன்னா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
லண்டன் 1050/= இத்தாலி 1250/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | மல்லாவி துணுக்காய்

northern PC PARK



வடக்கின் கணினிப் பூங்கா

10, Muddaskadai Junction
Stanley Road, Jaffna

Northern Pc Park | 077 757 0124 | 021 567 5566
NPcpark | 077 336 6443 | 021 222 9581
northernpcpark | 075 555 7327 | 021 222 2050
Northern PC Park | 071 777 2377 | 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co

Hot Line - 077 777 1545

HIKVISION Mega Store
CCTV and Video Surveillance
கிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)



உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.

நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்

HIKVISION



Hot Line -021 222 7126

077 473 6057
077 2871 841
077 899 2923

இல - 164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
164, Palaly Road, Thirunelvely, Jaffna

hikvisionmegastore@gmail.com

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1991.06.05 | பிறந்த திகதி - 1999.03.23 |
| நட்சத்திரம் - சதயம் | மதம் - இந்து V |
| பாவம் - 41 1/4 | நட்சத்திரம் - மிருகசீரிடம் |
| செவ் - 02இல் | பாவம் - 17 1/4 |
| கல்வி - பட்டதாரி | செவ் - ----- |
| தொழில் - வங்கி வேலை | கல்வி - A/L |
| எதிர்பார்ப்பு - கனடா OR UK | தொழில் - ------- |
| | எதிர்பார்ப்பு - சாதாரண மணமகன் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம் முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற் கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம் இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்

### கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir

# மாவீரர்களின் தியாகங்களுக்கு தலை வணங்குகின்றோம்
# நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரை

வரவு – செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரை ஆற்றினார்.

அவரது உரையில் கூறிய உண்மைகளைச் சகித்துக்கொள்ள முடியாதா பேரினவாதிகள் கூச்சல் குழப்பமிட்டு உரையை குழப்ப முற்பட்டனர். பேரினவாதிகளின் குழப்பங்களை தாண்டி அவர் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ் அரசியல் நாள்காட்டியில் மிக முக்கியமானதும் புனிதமானதுமான வாரத்தின் முதல் நாளில் எமது மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் தேசத்திற்காகவும் போராடி தமது உன்னதமான உயிர்களையே தியாகம் செய்த அந்த உன்னதமானவர்களுக்கு எமது தலைகளை சாய்த்து மரியாதைகளை தெரிவித்துகொண்டு எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

(இங்கு இந்த யுத்த குற்றவாளி சரத் பொன்சேக ஈனமான குரலில் சத்தம் போட்டு எனது உரையை குழப்புகிறார்.)

இந்த அரசு பதவியேற்றுக்கொண்ட போது , இந்த அரசு தமிழர்களின் தேசிய பிரச்சினை குறித்து தனது கரிசனையை செலுத்தும் என எதுவித போலியான நம்பிக்கைகளும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியிடம் இருந்திருக்கவில்லை.

தமிழ்த்தேசிய பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்த அரசுக்கு எதுவித திட்டங்களும் இல்லை என்பதிலும் எமக்கு சந்தேகம் இருதிருக்கவில்லை.

அது போல, இந்த அரசு மீது சுமத்தப்பட்ட யுத்தக்குற்றங்கள் குறித்தோ அல்லது அப்படியான குற்றங்கள் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவது குறித்தோ இந்த அரசுக்கு ஏதாவது அக்கறை இருக்கும் என்பதிலோ நாம் சந்தேகம் கூட படவில்லை.

தற்போதைய காலகட்டத்தில் தமிழர்கள் முக்கியமானதாக கருதுகின்ற தமிழர்களுக்கான தீர்வு மற்றும் தமிழர் மீது இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் என்பவற்றிலோ இந்த அரசுக்கு ஏதாவது கரிசனை இருக்குமோ என்பதில் நாம் எதுவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லாத அளவுக்கு அது வெளிப்படையானது .

அதேவேளை, இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது, இங்கு இருக்கும் பிரச்சினைகள் அனைத்தையும் அபிவிருத்தி மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என ஜனாதிபதியும் பிரதமரும் பலதடவைகள் கூறியிருந்தார்கள்.

அதனால், இந்த அரசு சிலவேளைகளில் அபிவிருத்தியில் கரிசனை கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த முப்பது வருடங்களாக, இன்னும் சொல்லப்போனால் தமிழரசுக்கட்சி தமிழர் அரசியலில் செல்வாக்கு செலுத்த தொடங்கிய காலங்களில் இருந்து தமிழர் தரப்பில் இருந்து எவரும் அரசுடன் இணைந்து அமைச்சுபதவிகளை பெற்று தமது மக்களுக்கு சேவை செய்யாமையால், மக்கள் அபிவிருத்தி எதனையும் பெற்றிருந்திருக்கவில்லை என்றும், அது தான் தமிழர்களிற்கான பிரதான பிரச்சினையாக அமைந்தது என்றும், ஆதலால் தாங்கள் எமது மக்களிற்கான அபிவிருத்தியை வழங்குவார்கள் என்றும், 30 வருட யுத்தத்தினால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கை மீளக்கட்டியெழுப்புவார்கள் என்றும் எம் மக்களின் பொருளாதாரம் வலுப்படுத்தப்படும் என்றும் வடக்கு கிழக்கு மக்கள் தம்மை மீளக்கட்டியமைத்து வாழ முடியும் என்றும் கூறிவந்தார்கள்.

முப்பது வருடகால போரினால் முற்றாக அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு முற்றாக அழிக்கப்பட்டு, வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதாரம் முற்றாக சிதைக்கப்பட்டிருந்தது என்கிற உண்மையை ஏற்று ஆகக் குறைந்தது பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்களிலாவது இவர்கள், போரினால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் தனித்துவமான பொருண் மிய பிரச்சினையையாவது அங்கீகரித்து ஏற்று நேர்மையாக செயற்படுவார்கள் எனும் எதிர்பார்ப்பு ஒன்று இருந்தது.

ஏறத்தாழ முப்பத்திரண்டு ஆண்டுகள் வடக்கு கிழக்கில் கொடுமையான பொருளாதார தடை அமுல்படுத்தப்பட்டிருந்தது. பொருளாதார தடையினால் வடக்கு கிழக்கில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ஏறத்தாழ 1,500 ரூபா வரை சென்றிருந்தது .

அதனால் , வடக்கு கிழக்கின் பொருளாதரத்தின் மிக முக்கிய கூறுகளான மீன்பிடித்தொழிலையோ விவசாயத்தையோ செய்ய முடியாத அளவுக்கு இந்த பொருளாதார தடை மூலம் முடக்கப்பட்டார்கள்.

வடக்கு கிழக்கின் பெரும்பகுதி விவசாய நிலங்கள் மக்களுக்கு அனுமதியற்ற பிரதேசங்களாக ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது.

உதாரணமாக இங்கே இப்போது இருக்கின்ற சரத்பொன்சேக யாழ் மாவட்டத் தளபதியாக இருந்தகாலப்பகுதியில் யாழ் மாவட்டத்தின் ஏறத்தாழ 30 வீதமான பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயம் எனும் பெயரில் இராணுவம் தனது கட்டுப்பாடின் கீழ் ஆக்கிரமித்து வைத்திருந்தது .

(இந்த வேளையில் யுத்தக்குற்றவாளி சரத் பொன்சேகா மீண்டும் குறுக்கிட்டார். அதற்கு உங்களது பதில் ஒன்றும் இங்கு தேவையில்லை, இது எனக்குரிய நேரம், நான் சொல்வதைகேட்டுக்கொண்டு அமைதியாக உட்காரவும் என கஜேந்திரகுமார் கூறி அவரது குறுக்கீட்டை மீறி தன் உரையை தொடர்ந்தார்)

இந்த முப்பது வருட கால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது, இந்த நாட்டில் நிலவிய தமிழர்களின் பிரச்சினை தொடர்ந்தும் இருந்தது என்பதையும் அரசும் இராணுவமும் மிக கொடூரமான குற்றங்கள் இழைத்திருந்தார்கள் எனும் குற்ற சாட்டையும் ஒரு விவாதத்திற்காக ஒரு புறம் வைத்து விட்டு, ஆகக்குறைந்து வடக்கு கிழக்கின் பொருளாதாரத்தையாவது கட்டியெழுப்புவார்கள் என பார்த்தால், அதுவும் நடக்கவில்லை .

குறிப்பாக இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்பது இல்லை, பொருளாதார பிரச்சினை தான் அனைத்துக்கும் அடிப்படை என சொல்லிக்கொள்ளுகின்ற இந்த அரசாங்கம் வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார அபிவிருத்தியை கூட புறம் தள்ளியிருக்கிறது.

அபிவிருத்தி என வரும்போது, போரினால் அழித்தொழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசத்தை தனித்துவமாக அணுகுவதற்கு ஏன் இந்த அரசு மறுதலிக்கிறது?

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என வடக்கு கிழக்கை அறிவித்து, அங்கே வசிக்கின்ற மிக மிக பாதிப்புக்குள்ளான நலிவுற்ற மக்களையும் அவர்களின் பொருண்மியத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க ஏன் இந்த அரசு பின்னிற்கிறது?

அதன் மூலம் எதிர்காலத்திலாவது அவர்கள் தமது வாழ்வை நிலை நிறுத்திக் கொள்ள முடியும் ?

ஆனால் ஏன் அதை நீங்கள் செய்ய வில்லை? அது குறித்து அஞ்சுகிறீர்கள்? அந்த மக்கள் முனேறிவிடுவார்கள் என்றா?

தம்மை ஒரு இடது சாரிப்பின்புல முடையவர்கள் என காட்டிக்கொள்ளும் இந்த அரசு ஏன் அதை செய்ய பின்னடிக்கிறது?

பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட மக்களை விசேடமாக கவனிக்கப்பட்டு பராமரிக்கப்படவேண்டும், அழிவுறக்கூடிய பொருளாதாரங்கள் பாதுகாக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பது இடதுசாரித் தத்துவத்தின் மிகமுக்கிய அம்சம். இங்கு அமர்ந்திருக்கிற இடதுசாரி என அழைத்துக்கொள்ளும் வாசுவ்தேவ நாணயக்கார இதை நன்கு தெரிந்து வைத்திருப்பார் என நம்புகிறேன் .

முப்பது வருடம் போரை எதிர்கொண்டு அழிக்கப்பட்டு நலிவுற்ற வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதாரம் பாதுகாக்கப்பட்டு கட்டியெழுப்பப்படிருக்க வேண்டும் என்பதை உள்ளளவில் இடது சாரியாக கருதிக்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவாவது உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அதுகூட நடைபெற்றிருக்க வில்லை .

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை காணுதல், யுத்தம் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் என்பவற்றோடு, அபிவிருத்தி எனும் அம்சத்திலும் இந்த அரசு தோல்வியடைந்திருக்கிறது.

முப்பது வருடம் போரினால் அழிக்கப்பட்ட மக்களின் ஒடுக்கப்பட்ட பொருளாதாரமானது நாட்டின் போர் பாதிப்புற்ற ஏனைய பாகங்களின் பொருளாதாரத்தோடு சரிசமமாக போட்டிபோடவேண்டும் என எவ்வாறு நீங்கள் எதிர்பார்க்க முடியும்?

உண்மையில் இந்த அரசு வடக்கு கிழக்கில் வறுமையையே நிலை நிறுத்தவே எத்தனிக்கிறது .

வடக்கு, கிழக்கு மக்களை தொடர்ந்தும் வறுமையின் பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்றே இந்த அரசுவிரும்புகிறது .

இந்த மக்களை தொடர்ந்தும் பொருளா தாரத்தில் நலிவுற்ற நிலையிலும் வறுமைக்குள்ளும்வைத்திருப்பதன்மூலம் வடக்கு கிழக்கு மக்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழல் நிலையைத் தக்க வைக்கவே இந்த அரசு முயல்கிறது என்பதை இங்கு பொறுப்புடன் கூறிக் கொள்ளுகிறேன்.

உண்மையில் இடது சாரிய எண்ணம் கொண்ட எந்த ஒரு பிரக்ஞைபூர்வமான அரசும் பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து அவர்களின் சொந்த நிலத்தில் அந்த மக்களின் நிலைத்திருப்பிற்கு முன்னுரிமை கொடுக்குமேயன்றி மக்களின் நிலைக்கு சம்பந்தமற்ற உட்கட்டமைப்பின் வீக்க முற்ற அபிவிருத்தியை அல்ல.

உண்மையில் பொருளாதார ரீதியில் நலிவுற மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கும் அவர்களது வாழ்வாதார்த்தை மேம்படுத்தி அவர்களின் சொந்த மண்ணில் அவர்களின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் கொடுப்பதை விடுத்து, மக்களின் தேவையை பூர்த்தி செய்யாது, மக்களின் யதார்த்த நிலைக்கு தொடர்பற்ற வகையில் உட்கட்டமைப்பு குறித்த அபிவிருத்திகளையும் வீதிகளையும் பல பில்லியன் கணக்கில் அரசு செய்வதற்கு காரணமே, வறுமைக்குட்பட்ட அந்த நிலத்தின் சொந்த மக்கள், வாழ்வாதர உறுதிப்படுத்தல் இன்மையால் அங்கிருந்துவெளியேற நிர்பந்திக்கப்படும் போது சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதற்கே ஆகும் .

இந்த நாட்டில் இருக்கும் ஒவ்வொரு அங்குள்ள நிலத்தையும் விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும் என நிதியமைச்சர் கேட்டிருந்தார்.

அது உண்மையில் நியாயமானது. போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மெல்ல மெல்ல இப்போது தான் மீளெழுந்து வருகிறார்கள் .

ஆனால் அந்த மக்கள் திட்டமிடப்பட்ட கட்டமைக்கப்பட்ட வகையில் அவர்களின் சொந்த நிலங்களில் இருந்து இப்போதும் விரட்டப்பட்டு வருகிறார்கள். ஒவ்வொரு அங்குள்ள நிலத்தையும் விவசாயத்துக்கு பாவிக்கவேண்டும் என்பதை கொள்கையாக பேசும் இந்த அரசு ஏன் அந்த மக்களின் சொந்த நிலத்தை பயன்படுத்துவதை அனுமதிக்க மறுத்து அவர்களை விரட்டியடிக்கிறது? – என்றார்.

(இதை தொடர்ந்து அரச தரப்பு எம்பிக்களின் கூச்சல் குழப்பத்திற்கு மத்தியில் கஜேந்திரகுமார் அவர்களின் உரைநிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

அத்துடன் இறுதியில் நடைபெற்ற வரவு – செலவு திட்டம் மீதான வாக்கெடுப்பில் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் செயலாளர் செல்வராசா கஜேந்திரனும் எதிர்த்து வாக்களித்ததார்கள்.

# ‘2021 பட்ஜட்’ இரண்டாம் வாசிப்பு நாடாளுமன்றில் நிறைவேற்றம்!

## மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மீண்டும் நிரூபித்தது ‘மொட்டு’ அரசு

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 99 மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில், 151 பேர் ஆதரவாகவும், 52 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கடந்த 11 ஆம் திகதி வரவு – செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப் பட் டதுடன், அதன் இரண்டாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதம் 12 ஆம் திகதி முதல் நேற்று வரை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை 5.30 மணிக்கு அது தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் அரச தரப்பினரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலருமாக 151பேர் அதனை ஆதரித்து வாக்களித்ததுடன், ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 52பேர் அதனை எதிர்த்து வாக்களித்தனர்.

இதன்படி வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் டிசம்பர் 10 ஆம் திகதி வரையில் நடத்தப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 10ஆம் திகதி மாலை வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் முடிவடைந்த பின்னர் வாக்கெடுப்புக்குச் செல்ல அரச தரப்பினர் தீர்மானித்தபோது, ரிஷாத் பதியுதீனை சபைக்கு அழைக்க நடவடிக்கை எடுக்காமை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பு வெளியிட்டனர்.

வாக்களிப்பின்போது ரிஷாத் பதியுதீனைச் சபைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகரினால் உறுதியளிக்கப்பட்டிருந்த நிலையில், அவ்வாறு அவர் அழைக்கப்படாது வாக்கெடுப்புக்குச் செல்வது சட்டவிரோமாகும் என்று சபையில் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. சுட்டிக்காட்டினார்.

இதன்போது சிறையில் இருக்கும் ஆளும் கட்சி உறுப்பினரான பிரேமலால் ஜயசேகர சபைக்கு வந்திருந்தமை எவ்வாறு என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. கேள்வி தொடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சுகயீனம் காரணமாக தன்னால் சபைக்கு வர முடியாது என்று ரிஷாத் பதியுதீன் அறிவித்துள்ளார் என்று குறிப்பிட்டார்.